Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17.08.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 320

## யாழ்.போதனாவைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக்குழு தெரிவு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றைய தினம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவால் வழங்கப்பட்டன.

நேற்றைய தினம் போதனா வைத்தியசாலைக் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மௌலவி சுபியான், சட்டத்தரணி ரெங்கன், அகஸ்ரின் மாஸ்டர், சொல்லின் செல்வர் செல்வவடிவேல், பொறியியலாளர் சூரி, தங்கராசா, பாலகிருஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## மடுவில் பறந்த விமானம் விமானப்படைக்குரியதல்ல



மன்னார் மடு திருத்தல ஆவணித் திருவிழாவான நேற்றுமுன்தினம் ஆலயத்தின் முற்பகுதியில் வானில் பறந்ததாகக் கூறப்படும் சிறியரக விமானம் இலங்கை விமானப்படைக்கு சொந்தமானது அல்லவென விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விமானப்படைத் தரப்பிற்கு எவ்விதமான தகவல்களும் பதிவாகவில்லை என இலங்கை விமானப்படைப் பேச்சாளர் அலுவலகத்தின் விங் கொமாண்டர் பத்மன் டி கொஸ்தா தெரிவித்தார்.

மடு திருத்தல ஆவணித் திருவிழாவின் திருப்பலி நேற்று முன்தினம் காலை ஒப்புக்கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த சிறிய ரக விமானம் வானில் பறந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இரைச்சலுடன் வானில் பறந்துகொண்டிருந்த இந்த விமானத்தில் ஆட்கள் எவரும் இருக்கவில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவரின் அத்துமீறலைத்தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அரசிடம் கோருகிறது வடக்கு கடற்றொழிலாளர் இணையம்



(வவுனியா)

இலங்கை கடற்பரப்பில் தொடர்ச்சியாக அத்துமீறும் இந்திய மீனவர்களின் செயற்பாட்டினை முற்றாகத்தடுக்கும் வகையில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றையதினம் வவுனியாவில் இடம்பெற்ற இணையத்தின் பொதுக்கூட்டத்திலேயே இந்தக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் அமைப்புக்களின் முக்கிய பிரதிநிதிகள் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்களின் எல்லைதாண்டிய வருகையைத் தடுப்பதற்காக ஒரு சில மீனவரகளை அவர்களின் படகுகளுடன் கைது செய்துவிட்டு, பின்னர் அவர்களை விடுதலை செய்வதென்பது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றும் இதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு மீனவர்களும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தில் இணைந்த தமிழ்ப்பெண் புற்றுநோய் காரணமாகவே உயிரிழப்பு

### யாழ்.போதனா பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வயிற்றுப்புற்றுநோய் காரணமாக குடலில் ஏற்பட்ட அடைப்பே இராணுவத்தொண்டர் படையின் வீராங்கனை அஜந்தா பிரசாத் (வயது 23) உயிரிழக்கக் காரணம் என்று யாழ். போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசா வைத்திய அறிக்கையை மேற்கோள் காட்டித்தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் இலங்கை இராணுவத் தொண்டப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பெண்கள் 44 பேர் காங்கேசன்துறை 7ஆவது மகளிர் படையணிக்கு உள்வாங்கப்பட்டனர். இவர்களுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட பெண் வீராங்கனை பயிலுனராக அஜந்தா பிரசாத் (வயது-23) 154 மைல்கல் செல்வபுரம் திருமுறுகண்டி, என்பவர் வாந்தி, வயிற்று வலி காரணமாக கடந்த மாதம் 26ஆம் திகதி பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## உயர்தர பரீட்சைக்கு தோற்றும் இரு மாணவர்களிடம் ஹெரோயின்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய இரு மாணவர்களின் காற்சட்டைப் பைகளில் வைத்திருந்த ஹெரோயின் மீட்கப்பட்டதுடன், அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் காலி பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சமயம் ஒரு மாணவனிடமிருந்து 800 மில்லிகிராம் ஹெரோயினும், மற்றவரிடமிருந்து ஆயிரத்து 600 கிராம் ஹெரோயினும் இருந்ததாகத் தெரியவருகின்றது. இவர்கள் இருவரும் அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் காலியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயின்று வந்தவர் எனவும் தெரியவருகிறது. அவரது பாடசாலை வருகை நாட்கள் மிகவும் குறைவாக இருந்தபடியால் அவர் பாடசாலைப் பரீட்சார்த்தியாகத் தெரிவு

19 ஆம் பக்கம் பார்க்க

## தன்னம்பிக்கை, மதிநுட்பமே சிறந்த பெறுபேற்றுக்கு வழி

### வாழ்த்துச் செய்தியில் ஆளுநர்



இன்றையதினம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கு தனது ஆசியைத் தெரிவித்துள்ள வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும், நிதானத்துடனும், மதி நுட்பத்துடனும் பரீட்சையை அனுகி சிறந்த பெறுபேறுகளைப பெற வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

19 ஆம்பக்கம் பார்க்க

## பரீட்சைக்கு தோற்றும் தரம் 5 மாணவர்களுக்கு

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் இன்றையதினம் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சைகள் திணைக்களம் விசேட ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

வினாத் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் தொடர்பில் மாணவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.


19 ஆம் பக்கம் பார்க்க



### வாழ்த்துகிறோம்

இன்று நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தினமுரசு குடும்பம்



## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
## STRUCTURED NETWORK CABLING SYSTEM FOR THE FACULTY OF ENGINEERING KILINOCHCHI

1.**the chairperson, procurement Committee of university of jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for **"Structured Network cabling system for the faculty of engineering, Kilinochchi"** at an estimated to cost of **Rs 6.5 Million excluding VAT**

this shall be a **measure and pay** contract and the contract period is **forty five(45) calendar days.**

2. Bidding will be conducted through National competitive Bidding proccdure

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be shall be a registed company with a minimum of five experience in strucured network cabling.

4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar capital works & planning unit, University of jaffna, Thirunelvely, Jaffna.** and view the Biddding documents at the same address on any working day form **9.00 hrs to 16.00 hrs**
contact Numbers are: phone.**021 222 19201**, facsimile -**021 221 9201**

5. A complete set of bidding documents in english language may be purchased by intrested bidders on the submission of written application to the **deputy Registrar, Capital work & Planning unit, university of jaffna, thirunelvely, jaffna. from 18 th August 2014 until 4 th september 2014 form 9.00 hrs to 15.00 hrs** and upon payment a of non-refundable fee of Rupees **three thousand (Rs.3 000/=)**

6. Sealed bids Shall be delivered or sent by registered post to the **chairperson, procurement Commitee of university of jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or** be deposited in the tender box kept **in the Registrar's office** to reach **on or before 14.00 hrs on 05 th september, 2014,** Bids will be opened soon after closing **at 14.00 hrs on 05 th september, 2014** at the board room of the vice chancellor in the presence of the bidders representatives who choose to attend.

7. Bids shall be valid at least for a period of **90 days** from the date fixed for receiving of bids or any extended date.

8. All bids shall be accompanied by a bid security which shall be:
* In the form included in the section 09 in the bidding document.
* In favour of ***"Vice chancellor, University of jaffna"***
* for a amount of **Rs, 70,000/=**
* Issued by one of the agencies indicated in the clause 16.0 of the schedule 9

9. pre bid meeting will be held at facult of engineering, Ariviyal Nagar Complex Kilinochchi at **10.30 hrs on 29 th August 2014**

**Vice Chancellor**
**university of jaffna,**
**Thirunelvely, jaffna.**
**15.08.2014**

(C/3783)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 282
திகதி - 2014.08.15
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

01 17 46 47 C

பரிசுத் தொகை ரூபா. 11,177,760/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 12 | 600,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 214 | 214,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 388 | 388,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9617 | 577,020/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5116 | 204,640/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 125171 | 2,503,420/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18194 | 363,880/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,177,760/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,850,960/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,423,100/-

2014.08.19ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3760)


# அடிக்கடி ஏற்படும் மின்தடையால் மன்னாரில் மாணவர்கள் பாதிப்பு

### – மின்தடைக்கு தீர்வுகாண கோரிக்கை –

மன்னார் நகரப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின் தடையால் மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மன்னார் நகரில் தினமும் மின்தடை ஏற்படுகின்றது. தொடர்ச்சியான இவ்வாறான மின்தடை ஏற்படுவதால் மாலை நேரப்பகுதிகளில் வர்த்தக நிலையங்களில் தமது தொழில்களை மேற்கொள்வதில் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தற்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் இவ்வாறான திடீர் மின்தடையால் பரீட்சைக்காக கற்கும் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர் கடந்த சில நாட்களாக இவ்வாறான மின் தடை நீண்ட நேரம் வரை நீடித்ததாகவும் இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர நோக்குவதாகவும் பொதுமக்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இம்மின் தடை குறித்து மன்னார் மின்சார சபையினருடன் பல முறை தொடர்புகொண்டு தெரியப்படுத்தியும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என மன்னார் வர்த்தக சங்கத்தின் கிளைத் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறாக அடிக்கடி ஏற்படும் மின் தடையை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள மன்னார் மின்சார சபையினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும எனப் பலரும் கோரிக்கை விடுததுள்ளனர். (140)

# சிறுநீரக நோய்ப் பாதிப்பு; 13 பேருக்கு கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை 13 பேருக்கு சிறுநீரக நோய்ப்பாதிப்பிற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன், பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினூடாக கிராம அலுவலர்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பேரில் இந்த நிதி நன்டகொடையை பெற்றுக் கொடுத்துள்ளார்.

தலா 500 ரூபா வீதம் மாதாந்தம் வீட்டிற்கு அண்மையிலுள்ள தபாலகம் உப தபாலகம் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலேயே சிறுநீரக நோயாளிகள் அதிகளவானோர் இனங் காணப்பட்டு நிதி உதவியைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சிறுநீரக நோயால் பாதிக்கப்படும் ஒருவர் அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தையும் கிராம அலுவலரிடம் சிபாரிசு பெறப்பட்ட கோரிக்கை கடிதத்தையும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் சமர்ப்பித்து உதவி நன்கொடையைப் பெற முடியும்.

நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் இது போன்ற உதவித் திட்டங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# சமயநிறுவனங்களின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமய நிறுவனங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கியூடெக் கரித்தாஸ் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை யாழ்.கரிதாஸ் கியூடெக்கினால் சர்வமத சகவாழ்வுக்கான ஒன்றிப்பு நடாத்துகின்றன.

சகல சமயங்களையும் கொண்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (105)

# இரதோற்சவம்

(அளவெட்டி)

அளவெட்டி-நாகேஸ்வரம்,ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான இரதோற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. முன்பாக 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று உள்வீதி வலம் வந்து தேருக்கு எழுந்தருளி நாக வரதநாராயணர் ஸ்ரீ தேவி பூமாதேவி புடைசூழ தேரோடி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். முன்னதாக 9 மணிக்கு ஸ்ரீ ரங்க நாதர் பாத பூசை இடம்பெறும்.

20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் நிகழ்வும் முற்பகல் 4 மணிக்கு திருக்கல்யாணத் திருவிழாவும் நிகழுமெனவும் பொறுப்புரிமை பரிபாலன சபை அறிவித்துள்ளது. (68)

# கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை இடம்பெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் இரவு 10 மணி தொடக்கம் 12 மணி வரை விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இசைமாணி பி.பத்மராஜின் புல்லாங்குழல் இசையும், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் மோ.ஹரிஹரனின் "பாற்கடல் அளந்த பிரான்" தெய்வீகப் பேருரையும் இசைக்கலாவித்தகர் ப.சியாம கிருஷ்ணா, கலாவித்தகர் பா.காயத்திரி ஆகியோரின் வயலின் சோலோ என்பனவும் இடம்பெறவுள்ளது.

நள்ளிரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணனின் ஜனனபூசை மற்றும் தாலாட்டு நிகழ்வுகளைத் தொடர்ந்து சுவாமி வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவதுடன் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி காயம் அடியவர்களுக்கு வழங்கப்படும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று சுவாமி வெளிவீதி உலா இடம்பெற்று உறியடி உற்சவம் சிறப்புற இடம்பெறவுள்ளது.


## டயானா பிளாஸ்ரிக்
***ரீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிரிவில் விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியப்பிரிவின் 2014 ஆம் ஆண்டிற்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் 230 பேருக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் விருதுகளை வழங்கி வைத்தார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு வருகை தந்த விருந்தினர்கள் விருதுகளைப் பெறுபவர்களின் வரவேற்பு நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டதும் நிகழ்வு ஆரம்பமாகியது.

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் ஏ.எல்.யவ்பர் சபீகூ இலங்கை திறந்த பல்கலைக்கழக பணிப்பாளர் கே.ஏச். ஜெயவர்த்தன. திறந்த பல்கலைக் கழக பேராசிரியர் சி.ஈ.குணவர்த்தன ஆகியோர் நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் முகாமைத்துவம், அடிப்படை ஆங்கிலம், அடிப்படை தமிழ், உட்பட சுமார் 12 துறைகளுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.


மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது 2020 ஆம் ஆண்டில் குடும்பத்தில் ஒருவராவது திறந்த பல்கலைக்கழக சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருக்கும் வகையில் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக இந்நிகழ்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# 13 வறிய குடும்பங்களுக்கு சுயதொழில் நிதி நன்கொடை

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 13 வறிய குடும்பங்களுக்கு 'சுய தொழில் நிதி நன்கொடை' வழங்குவதற்காக நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் உரிய பயனாளிகளுக்கு நிதி நன்கொடையை சமூக சேவைகள் பிரிவினூடாக வழங்கி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதல் கட்டமாக தலா 7500 ரூபா வீதம் வழங்குவதற்கென 97500 ரூபா நிதி இவ்விதம் வழங்கப்பட்டுள்ளது. ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, சிறு வியாபாரம்,சிறு கைத்தொழில் போன்ற தொழில் முயற்சிகளுக்கே இந்த நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளது சுயதொழில் முன்னேற்றத்தினை அளவிட்டு இரண்டாம் கட்ட நிதியாகிய தலா 7500 ரூபா வீதம் பெற்றுக் கொடுக்கப்படும்.வறிய நிலையிலுள்ள பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் வாழும் குடும்பங்களே இவ்விதமாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. (90)



அருள்மிகு கைதடி நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற வரலட்சுமி விரதத்தின் போது... (51)

# மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு வீடுகள் புனரமைக்க நிதி வழங்கல்

(பளை)

சமூகசேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம், பளை பிரதேச செயலர் பிரிவில் மாற்றுத்திறனாளிகள் உள்ள குடும்பங்கள் 3 இற்கு வீடுகளை புனரமைக்க தலா 65,000 ரூபா வீதம் நிதியை அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிதி பிரதேச செயலர் மூலமாக உரிய பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வறிய நிலையிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு இவ் அமைச்சு வீட்டைத் திருத்துவதற்கான இந் நிதியை வழங்கிவருகின்றது.

வறிய நிலையிலுள்ள மாற்றுத் திறனாளிகளைக்கொண்ட குடும்பங்களுக்கு புதிதாக வீட்டை அமைக்க 250, 000 ரூபா நிதி வழங்கப்படும் திட்டமும் நடைமுறையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# சமூகசேவைப் பிரிவால் சக்கரநாற்காலி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வீரகத்தி பிள்ளையார் கோவிலடி, இமையாணன் மேற்கை சேர்ந்த சிவஞானம் அன்னமார் என்பவருக்கு வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் சக்கரநாற்காலியை இலவசமாக வழங்கியுள்ளது.

இப்பயனாளியை கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேசசெயலர் எஸ்.சிவசிறி கேட்டுள்ளார்.

மேலும் முச்சக்கரவண்டி, சக்கர நாற்காலி, மூக்குக்கண்ணாடி, செயற்கை அவயவங்கள் பொருத்துதல், காது கேட்கும் கருவி,. ஊன்றுகோல் தேவைப்படுவோர் மருத்துவ அதிகாரிகளின் சிபார்சு கடிதத்துடன் சமூகசேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# சொந்த நலனைப் பார்க்கிற அரசியல்... இனமானத்தைச் சொல்லிப் பிழைப்பு...




வடக்கு மாகாணசபைக்குள்ள முறுகல் எண்டால் அதைப்பற்றிச் சொல்லி வேலையில்லை.

அந்த அளவுக்கு ஏகப்பட்ட போட்டிகளும் பிரச்சினைகளும் உள்குத்து வெட்டுகளும் கழுத்தறுப்புகளுமாக மாகாணசபையே உச்ச வெப்பத்திலதான் இருக்கு.

எந்த நேரமும் மாகாணசபைக் கட்டிடமே தீப்பிடிக்கலாம் எண்ட நிலைதான் இப்ப இருக்கு எண்டு சொல்லிக் கவலைப்படுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை மாகாணசபை உறுப்பினர் ஒருவர்.

இந்த வயசாளியான மாகாணசபை உறுப்பினருக்கு இதையெல்லாம் பார்க்க வெட்கமாகவும் கவலையாகவும் இருக்கு.

இதை இப்பிடியே விட்டால் நாளைக்கு கூட்டமைப்பின்ரை எதிர்காலமும் பாதிப்படையும். சனங்களின்ரை வாழ்க்கையும் மண்ணாய்ப் போகும் எண்டு தன்ரை அபிப்பிராயங்களை சக மாகாணசபை உறுப்பினர்களுக்குச் சொல்லிப்பார்த்தார்.

எவரும் இதற்கு நல்ல பதிலைச் சொல்லக் காணோம்.

அப்பிடியே கூட்டமைப்பு எம்பி மாருக்கும் முதலமைச்சருக்கும் மாவையருக்கும் சம்பந்தருக்கும் தனித்தனியாகக் கடிதங்கள் எழுதிப்பார்த்தார்.

அதற்கும் பதிலில்லை.

எல்லா முயற்சிகளும் வீணாகிப்போனாலும் இந்த விக்கிரமாதித்தன் சோர்ந்து விடவில்லை.

அப்பிடியே மாவையைச் சந்தித்து பிரச்சினைகளைச் சொல்லிப்பார்த்தார்.

எல்லாத்தையும் கேட்ட மாவையர் கையை விரித்தார்.

பிரச்சினை என்னெண்டால், மாகாணசபை உறுப்பினர்களில கனபேர் ஆளை ஆள் மதிக்கிறேல்லயாம். ஒருத்தரைப் பற்றி ஒருத்தர் பகிரங்கமாகவே சனங்களுக்கு மத்தியில தரக்குறைவாகக் கதைக்கினமாம்.

உள்ளுக்குள்ளே அணி சேர்ந்து கொண்டு தங்கட காரியங்களைப் பாக்கிறதுக்குத் துடிக்கினமாம்.

கொஞ்சம் செல்வாக்காக இருக்கிற அனந்தியைச் சிலபேருக்குப் பொறுக்க முடியேல்லயாம்.

முதலமைச்சருக்கு அடுத்தபடியாக ஏராளம் வாக்குகளை எடுத்தும் இன்னும் அந்தப் பிள்ளைக்கு உரிய மதிப்பைக் குடுக்கிறாங்களில்லை. சனங்களுக்குத் தெரிஞ்ச அறிவு இவங்களுக்கு இல்லாமப் போயிட்டுது எண்டெல்லாம் குமுறினார்.

எனக்கு இதொண்டும் புதிசில்லை.

சனங்களுக்கு செய்ய வேண்டியதுகளைச் செய்யாமல், தங்கட காரியங்களைப் பாக்க வெளிக்கிடுகிற ஆட்களிட்ட இந்த மாதிரிப் போட்டி பொறாமைகளும் குத்து வெட்டுகளும் தாராளமாக இருக்கும் எண்டதொண்டும் புதிய சங்கதியில்லை.

சொந்த நலனைப் பார்க்க வெளிக்கிட்டால் சமூக நலனைப் பற்றின அக்கறையும் வராது.

இதுதான் தமிழ் அரசியல்வாதிகளின்ரை பழக்கமே.

அதிலயும் இந்த இனமானத்தைச் சொல்லிப் பிழைப்பு நடத்திற அரசியல்ல வெட்கத்துக்கும் மனச்சாட்சிக்கும் இடமேயில்லை.

ஆனால், வெளிப்பூச்சுக்கு தாங்கள்தான் தேசியவாதிகள், தாங்கள்தான் தியாகிகள், தாங்கள்தான் எல்லாத்தையும் வெட்டி விழுத்தக்கூடிய கெட்டிக்காரர்கள் எண்ட மாதிரி ஒரு தோற்றம் காட்டுவினம்.

உள்ளுக்குள்ள பார்த்தால் ஆளுக்காள் குழிபறிக்கிறதில படு கில்லாடியாக இருப்பினம்.

தேர்தல் காலத்தில இந்தத் தேசிய ஒற்றுமையை இவையிட்டப் பாக்கோணும்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிஞ்சாப் பிறகு அமைச்சுப் பதவிகளுக்கு அடிபட்டதில இருந்து பதவிப்பிரமாணத்தை எடுக்கிறதில காட்டின ஒற்றுமையை எல்லாம் புத்தியுள்ள எந்தத் தமிழரும் மறக்க மாட்டினம்.

அந்த அளவுக்குக் கேவலமாக பதவிக்கும் பவிசுக்குமாக அடிபட்டுக் கொண்டிருந்த ஆட்கள் இப்ப வெள்ளை வேட்டியோட தேசியப் பணியாற்றுகினம்...

எல்லாம் இந்தத் த்மிழ்ச் சமூகத்திலதான் விளையாடலாம்.

விடுதலைக்காக எண்டு ஆயுதந்தாங்கிப் போராடி களப்பலிகளைக் கண்ட ஒரு சமூகத்தில இப்பிடியான போலித் தேசியவாதிகளுக்கும் பொய்ப் புலிகளுக்கும் பொய்ப் போராளிகளுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு.

என்ன செய்யிறது? எல்லாம் ஒரு காலம்தான்.

ஆனால், இந்தக் காலந்தான் இவைக்கும் இவையின்ரை இந்தக் கூத்துகளுக்கும் சவப்பெட்டியையும் தயாரிக்கிறது எண்டதை விசயம் விளங்கினவைக்கு விளங்கும்.

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எல்லோரும் வாழ வேண்டும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியா எப்போது கூப்பிடும்? அமெரிக்காவோ இங்கிலாந்தோ அல்லது வேறெந்த ஒரு நாடாவது "இலங்கையரசின் மீதான போர்க்குற்ற விசாரணையை விடவே மாட்டோம்" என்று திரும்பவும் ஒருக்கால் சும்மா ஒரு இதுக்காகவேனும் சொல்ல மாட்டார்களா?...

இந்த ஜெனீவாத் திருவிழாக் கோதாரி தொடங்க இன்னும் நாலைஞ்சு மாதம் இருக்கிறது, அதுவரைக்கும் "இலங்கை அரசின் மீதான சர்வதேசத்தின் கிடுக்கிப்பிடி இதோ இறுகிக் கொண்டிருக்கிறது" என்று சொல்லித் தாக்காட்ட இந்தச் சர்வதேசத்தில யாராவது ஏதாவது சொல்ல மாட்டார்களா?....

இப்படியான காத்திருப்பில்தான் இப்போது கூட்டமைப்புத் தலைவர்களும் கூட்டமைப்பின் ஊடகப் போராளிகளும் உள்ளனர் என்று தோன்றுகிறது. அறிக்கைகளில், செய்திகளில் விறுவிறுப்போ வீராவேசச் சவால்களோ இல்லாத ஒருவித சோர்வுநிலையில் நம் சூழல் இருப்பதாகத் தெரிகிறது.

அங்கேயும் சம்பிக்க, வீரவன்ச போன்ற ஆட்கள் உவப்பான "பிடிகள்" கொடுத்து எதையாவது பேசவும் காணோம். ஏன் சோர்ந்து போனார்கள் என்று தெரியவில்லை.

அப்பிடி "சுள்ளாப்பாய்" அவர்கள் எதையாவது சொன்னால் தானே, "பாருங்கள் சிங்களப் பேரினவாதத்தை... உவர்களோடு பேசிச் சரிவருமா... அடிதான், அது ஒண்டுதான் சரிவரும் ஆனால் அதுக்கு எங்கட பெடியளை இப்ப உடன தயார்படுத்தேலாது... இப்ப சர்வதேசத்தைக் கொண்டு அடிபோடுறதைத் தவிர வேற வழியில்லை..." என்று உருவேற்றத்தை இந்தப்பக்கம் தக்க வைக்கலாம்...

தீர்வு சரிவராது... இலங்கை அரசுடன் பேச்சு சரிவராது... மாகாண சபை சரிவராது... தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி வேலைவாய்ப்பு, முன்னேற்றம் எண்டு ஒண்டும் நடக்காது... இங்கு எது செய்யவும் சிங்கள இனம் விடாது... அடுத்த தேர்தலிலும் இன்னும் விசேசமாய் ஒற்றுமையைக் காட்டி, சர்வதேசத்தைத்தான் எப்படியாவது இதுக்குள்ளே இறக்கப் பார்க்க வேணும்...

இவ்வளவுதான் தமிழ்த் தரப்பின் அரசியல் சாணக்கியமாகத் தொடர்கிறது. எம்பிமார் மகாணசபை உறுப்பினர்மார் நகர சபை பிரதேசசபை உறுப்பினர்மார் என்று ஒரு முன்னூறு நானூறு பேருக்கு பதவிகளும் சலுகைகளும் வசதிகளும் (கார்கள், வீட்டு வாடகைகள் எல்லாம் மற்ற மற்ற மாகாணங்களுக்குக் குடுக்கிற மாதிரி தரத்தானே வேணும்... அப்பிடித் தராவிட்டால் விடாமல் கடிதங்கள் எழுதி அதையெல்லாம் எடுக்கத்தானே வேணும்...) கிடைக்குது போதாதா?

மக்களுக்கு தீர்வோ வசதி வாய்ப்புகளோ "அற்ப சலுகைகளோ" கூடக் கிடைக்காமல் தலைவர்களுக்கு மட்டும் வேண்டிய எல்லாம் கிடைத்தபடி இருக்கிறது. ஒரு காலை பத்திரமாக வெளிநாட்டிலும் வைத்துக்கொண்டு "இந்தச் சிங்களவனைச் சும்மா விடக்கூடாது" என்ற பேய்க்காட்டு அரசியலை நடத்த முடிகிறது.

மக்களுக்கு இவர்களும் இவர்களது ஊடகங்களும் ஆற்றும் ஒரே உதவி, போர் இல்லாத இப்போதும் கூட வெளிநாடுகளுக்கு "அசைலம்" எடுப்பதற்கு உதவியாக பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் நடந்துகொண்டும் இருப்பதுதான்!

பழிதீர்த்தலும் பகையும் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பையும் வாழ வைப்பதில்லை; வலிகளும் வாதைகளும் எல்லோர்க்குமாய்த் தொடர்வதையே அது ஊக்குவிக்கும்.

நாமும், நம் குழந்தைகளும் எதிர்காலச் சந்ததியும் வாழ்வதற்கு இப்போது நாம் செய்ய வேண்டியதை நமது மக்கள் குறிப்பாக சிந்தனைத் தரப்பினர் உணர்ந்து வெளிப்படுத்த வேண்டும். நம் வெறுப்புணர்வை, விரோதத்தை, பழியுணர்ச்சிகளை விட்டு விட்டு "வாழ்வதற்கு" யோசிக்க வேண்டும். - *ஆசிரியர்*

# அழகு நிலையங்களுக்கு கட்டுப்பாடு

# வருகிறது புதிய சட்டம்

அழகுக் கலை நிலையங்களை நடத்துவது தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள் போதுமானதல்ல என்பதால் அதனை திருத்த அல்லது புதிய சட்டத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படுமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சுகதார அமைச்சின் சட்டப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பெண் மருத்துவர் ஒருவர் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள நிமால் கமகே என்ற மருத்துவரிடம் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்ற போது ஊசி மருந்து விஷமானதில் உயிரிழந்தார்.

பம்பலப்பிட்டியில் உள்ள இந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிலையம் தொடர்பாக 2011 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சிடம் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் சங்கம் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தி ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை ஆராய்ந்து ஒரு வாரத்திற்கு அறிக்கை தருமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிறுவனம் குறித்து சுகாதார அமைச்சு விரிவான விசாரணைகளை நடத்தி வருகிறது. இவ்வாறான நிறுவனங்களைக் கண்டறிய பொது மக்கள் உதவவேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஐ.தே.கட்சியில் சஜித் எம்.பி.க்கு உரிய அந்தஸ்து வழங்க முயற்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தலைவர்களும் இந்த மாத இறுதிக்குள் ஊவா மாகாணத்தில் ஒரே மேடையில் ஏறுவார்கள் என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்து கோரள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராக தகுதியுடைய சஜித் பிரேமதாசவுக்கு வழங்கவேண்டிய இடத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வழங்குவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஊவா மாகாண சபைத் தேர்தலில் மாத்திரமல்ல அடுத்து நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் ஒரே மேடையில் ஏறுவார்கள்.

எதிர்வரும் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை பற்றி நலமான செய்தியை கட்சியினர் கேட்க முடியும். ரணில் விக்ரமசிங்கவுக்கு பின்னர் சஜித் பிரேமதா சவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்பார்.

இதனால் சஜித் பிரேமதாசவுக்கு கட்சியினால் செய்ய வேண்டியதை கட்சியின் தலைவர் செய்வார் எனவும் தலதா அத்துகோரள குறிப்பிட்டுள்ளார். ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ரணில் விக்ரமசிங்க,

ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின்னர், நடத்தப்பட உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில், கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க அறிவிக்கப்பட உள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான யோசனை முன்வைக்கப்படும் போது, அந்த வேட்பாளருக்கு அனைவரும் பூரண ஆதரவு வழங்கும் யோசனையும் முன்வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் தேசியத் தலைவரை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கலந்துரையாடல்கள் கட்சிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரமும் தொடங்கப்பட உள்ளது என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவச் சபையின் கீழ் நாடு முழுவதும் இந்த தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இடி,மின்னல் ஆபத்து இன்னும் நீடிக்கிறது

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்ற சீரற்ற காலநிலையுடன் தொடர்ச்சியாக இடிமின்னலின் அச்சுறுத்தலும் காணப்படுகிறது.

இதன் காரணமாக பொது மக்கள் இடிமின்னலில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு காலநிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் மின்னல் தாக்கியதில் பிக்கு ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர் உயிரிழந்தனர்.வவுனியா - போகஸ்வெள - நாமல்உயன விகாரையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கிய 65 வயதான பௌத்த பிக்கு ஒருவரும், அவருடன் இருந்து மற்றுமொருவருமே இவ்வாறு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று ஹப்புத்தளையிலும் மின்னல் தாக்கியதில் நான்கு பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இத்தாலிக் கடலில் 2 இலங்கையர் பலி

இத்தாலியில் விடுமுறையைக் கழிக்க கடலுக்கு குளிக்கச் சென்ற இலங்கையர்கள் குழு ஒன்றில் சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் கபாஸி கடற்கரையில் இவர்கள் பொழுது போக்கச் சென்றனர் என்றும் இதன்போது கடலில் குளித்த போது கடும் காற்று மற்றும் நீரோட்டத்தில் அடித்து செல்லப்பட்ட இருவர் காணாமற் போயினர் என்றும் - இருவரும் பின்னர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருவரும் 44, 38 வயதுகளையுடைய சகோதரர்கள் என்றும் கூறப்படுகிறது. -

# இடத்துக்கு இடம் மாறுகிறது அரிசியின் விற்பனை விலை

நிர்ணய விலையைவிட வர்த்தகர்கள் அதிக விலையில் அரிசி விற்பனையில் ஈடுபடுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சில பிரதேசங்களில் வர்த்தகர்கள் தங்களின் சுயவிருப்பின் பிரகாரம் அதிக விலையில் அசிரியை விற்பனை செய்வதாக நுகர்வோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் காரணமாக பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேரிட்டுள்ளதாகவும் நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நள்ளிரவு முதல் அரிசி வகைகளுக்கு அர்சாங்கம் விலை நிர்ணயம் மேற்கொண்டிருந்தது.

இதற்கமைய கல், மண் நீக்கப்பட்ட ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் சில்லறை விலை 77 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

ஒருகிலோகிராம் நாட்டுப் பச்சையரிசி 68 ரூபாவாகவும், சிவப்பு நாட்டரிசி மற்றும் வெள்ளைப் பச்சையரிசி என்பன 66 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டது.

சிவப்பு பச்சையரிசி ஒரு கிலோகிராமின் விலை 60 ரூபாவாக விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்த நிர்ணய விலைகளைவிட அதிக விலையில் வர்த்தகர்கள் அசிரி விற்பனையில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுகர்வோர் மற்றும் விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளர் அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எம். டக்ளஸிடம் வினவியபோது, நிர்ணய விலையைவிட கூடுதல் விலையில் அரிசி விற்பனையில் ஈடுபடுகின்ற வர்த்தகர்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இத்தகைய வர்த்தகர்கள் தொடர்பில் 0771 088 922 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

சங்கர சிவன்

# தீர்வு அரசியலா? தேர்தல் அரசியலா? கூட்டமைப்புக்கு முன்னாலுள்ள தெரிவு

**தமிழ்த் தலைமையினால் இப்போது மேற்கொள்ளப்படும் இனவாதப் பிரசாரம் இரு இனங்களுக்கும் இடையிலான இடைவெளியை நாளுக்கு நாள் அகலிப்பதாகவே இருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்விலும் பார்க்க தேர்தல் வெற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியலையே தமிழ்த் தலைவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.**









**தமிழ்** மக்களின் அரசியல் விசித்திரமானது. ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம், சம்பந்தன் எனப் பலர் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியலுக்கு தலைமை ஏற்றபோதிலும் எல்லோரும் ஒரே வர்க்க சிந்தனைப் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் என்பதால் தமிழ் அரசியலின் அறுபத்தைந்து வருடங்களாக ஒரே தலைமையின் ஆதிக்கம் எனக் கூறலாம். காணி அபகரிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்ற ஒரே பிரச்சினைகளையே அன்று முதல் இன்று வரை சூடான பிரச்சினைகளாக இவர்கள் முன்வைத்து வருகின்றார்கள்.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக ஒவ்வொரு தேர்தலின்போதும் வாக்குறுதி அளிக்கும் தலைவர்கள் உணர்ச்சியூட்டும் எழுச்சிப் பேச்சுக்கள் மூலமும் துன்ப துயரங்களைப் பட்டியல் போடுவதன் மூலமும் மக்களின் வாக்குகளைப் பெற்று தங்கள் நாடாளுமன்ற பதவிகளைக் காப்பாற்றிக் கொள்கின்றார்கள். எந்தப் பிரச்சினைகளை முன்வைத்து மக்களின் வாக்குகளைப் பெற்றார்களோ அந்தப் பிரச்சினைகளில் அறுபத்தைந்து வருட காலத்தில் இவர்களால் எந்த வித முன்னேற்றத்தையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. ஏன் இவர்களால் முடியவில்லை என்ற கேள்வியைக் கேட்டு மக்கள் நிதானமாகச் சிந்தித்தால் தெளிவு பிறக்கும். விட்ட தவறுகள் புரியும்.

தமிழ் மக்கள் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற போதிலும், எல்லாவற்றுக்கும் நதிமூலமாக இருப்பது இனப்பிரச்சினை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போது மற்றைய பிரச்சினைகள் தாமாக மறைந்துவிடக் கூடியவை. ஆனால், தமிழ் தலைமை எப்போதும் மற்றைய பிரச்சினைகளுக்கே முன்னுரிமை அளித்துச் செயற்பட்டு வந்திருக்கின்றது. இந்த நிலையை இப்போது கூடுதலாக அவதானிக்கலாம். முன்னைய தலைமை ஒரு தீர்வுத் திட்டத்தை வைத்துக் கொண்டு மற்றைய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்தது. இன்றைய தலைமையிடம் தீர்வுத் திட்டம்கூட இல்லை. எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு இன்றைய தலைவர்கள் இனப்பிரச்சினையை ஓரங்கட்டிச் செயற்படுகின்றார்கள். இனப்பிரச்சினையிலிருந்து தமிழ் மக்களின் கவனத்தை முற்றாக திசை திருப்பும் நோக்கத்தில் போர்க்குற்ற விசாரணை போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார்கள். இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்வது தமிழ்த் தலைவர்களுக்கு அரசியல் மூலதனம் என்பதால் மற்றைய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றார்கள் போல் தெரிகின்றது. வரலாறு முழுவதும் இதுதான் நிலை. இரண்டு தலைமைகளுடன் தமிழ்த் தலைவர்கள் ஒப்பந்தம் செய்தபோதிலும் அவற்றை முன்னெடுக்கும் செயலில்லீடுபாடு இவர்களிடம் இருக்கவில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டபோதிலும் அதன் பிரதான சரத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான இரண்டு சந்தர்ப்பங்கள் பிற்காலத்தில் தமிழ்த் தலைவர்களுக்குக் கிடைத்தன. அவ்விரு சந்தர்ப்பங்களையும் தமிழ்த் தலைவர்கள் நிராகரித்துவிட்டனர். டட்லி-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான அம்சம் மாவட்ட சபை. அந்த அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி இணைந்தது. பிரதமர் டட்லி சேனநாயக ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து மாவட்ட சபை தருவது சாத்தியமில்லை எனக் கூறினார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் அதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தார்கள். இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் தமிழ்த் தலைவர்கள் நடந்து கொண்ட முறை அவர்கள் இனப்பிரச்சினையிலும் பார்க்க வேறு விடயங்களுக்கே முக்கியத்துவம் அளித்தார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.

இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை உள்ளவர்கள் தீர்வுக்குச் சாதகமான வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயற்பட வேண்டும். எந்தக் காலத்திலும் தமிழ்த் தலைமை அந்த வகையில் செயற்படவில்லை. இனப்பிரச்சினைக்கு நின்று நிலைக்கும் தீர்வொன்றைக் காண்பதற்கு சிங்கள மக்களின் ஆதரவு அத்தியாவசியமானது. இந்த ஆதரவைப் பெறுவதற்கு சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் கடப்பாடு பெருமளவில் தமிழ்த் தலைவர்களுக்கு உண்டு. சிங்கள மக்களின் ஜனநாயகப் போராட்டங்களில் தமிழர்களும் பங்குபற்றுவது அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும். ஆரம்பத்திலிருந்தே தமிழ்த் தலைமை அதற்கு இடமளிக்கவில்லை. சிங்கள மக்களை எதிரிகளாகச் சித்தரிக்கும் பிரசாரம் தான் தமிழ்த் தலைவர்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

சிங்கள மக்களின் ஜனநாயக மற்றும் பாட்டாளி வர்க்க உரிமைகளுக்கான போராட்டங்கள் பெரும்பாலும் இடதுசாரித் தலைவர்களாலேயே வழி நடத்தப்பட்டன. அப்போராட்டங்களில் தமிழ் மக்கள் பங்குபற்றுவதைத் தடுக்கும் வகையில் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டதற்கு அவர்களின் இடதுசாரி எதிர்ப்பு மனோபாவம் காரணமா அல்லது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முக்கியத்துவம் அளிக்காமை காரணமா என்பது ஆய்வுக்குரியது. இவ்விடயத்தில் பழைய தலைமையின் அணுகுமுறையே இன்றும் பின்பற்றப்படுகின்றது. தமிழ்த் தலைமையினால் இப்போது மேற்கொள்ளப்படும் இனவாதப் பிரசாரம் இரு இனங்களுக்கும் இடையிலான இடைவெளியை நாளுக்கு நாள் அகலிப்பதாகவே இருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்விலும் பார்க்க தேர்தல் வெற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியலையே தமிழ்த் தலைவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்திய நிலைப்பாடு கூட்டமைப்புத் தலைவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்திருக்கின்றது. இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் செயற்படுவதா அல்லது இனப்பிரச்சினை தீராமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகச் செயற்படுவதா என்ற குழப்பத்தைத் தமிழ்த் தலைவர்களிடம் இந்தியாவின் நிலைப்பாடு தோற்றுவித்திருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகவே பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் பார்க்கின்றது. இலங்கை அரசாங்கமும் தமிழ்த் தலைமையும் பேசுவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும் என்றும் அப்பேச்சுவார்த்தையில் இந்தியாவுக்கும் பாத்தியதை உண்டு எனக் கூறுகின்ற மோடி அரசாங்கம் இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பான முயற்சிகள் புதுடில்லிக்கு அப்பால் செல்லக்கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தமிழ்த் தலைமை இந்தியாவைத் தவிர வேறு நாடுகளை அணுகக்கூடாது என்பதே இதன் அர்த்தம். இதுதான் கூட்டமைப்புத் தலைவர்களுக்குச் சங்கடமான விடயம்.

அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை இலங்கையில் உருவாகுவதை அனுமதிக்கக் கூடாது என்ற புலம்பெயர் அமைப்புகளின் கட்டளையை அச்சொட்டாக நிறைவேற்றும் கூட்டமைப்புத் தலைவர்கள் அதற்காகவே மேற்கத்திய நாடுகளின் அணியில் இணைந்தனர். மேற்கத்திய நாடுகளின் இலங்கைக்கு எதிரான காய் நகர்த்தலுக்கு கைகொடுப்பதன் மூலம் இரண்டு வழிகளில் புலம்பெயர் அமைப்புகளின் எதிர்பார்ப்பைக் கூட்டமைப்பு நிறைவேற்றுகின்றது. சிங்கள மக்களிடம் சந்தேகத்தையும் ஆத்திரத்தையும் வளர்ப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையை ஒரு புறத்தில் உருவாக்குகின்றது. மறுபுறத்தில் போர்க்குற்ற விசாரணை போன்ற மேற்கத்திய நிகழ்ச்சி நிரலுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் இனப்பிரச்சினை பற்றிய சிந்தனையிலிருந்து தமிழ் மக்களைத் திசை திருப்புகின்றது. இனப்பிரச்சினையை ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தள்ளுவது அரசியல் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்பதால் இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை இருப்பதாக பாசாங்கு செய்யும் வகையில் அடிக்கடி இந்தியாவுக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள். இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கும் இப்போது திகதி கேட்டிருக்கின்றார்கள். இந்தியாவுடனான பேச்சுவார்த்தை இவர்களைப் பொறுத்த வரையில் வெறும் கண்துடைப்பு. இந்தியாவுடனான பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் அளிப்பது புலம் பெயர் அமைப்புகளின் எதிர்பார்ப்புக்கு முரணானதென்பதால் மேற்கத்திய நாடுகளுடனான உறவுக்கே கூட்டமைப்பு முக்கியத்துவம் அளிக்கின்றது. கூட்டமைப்பின் இந்த இரட்டை வேட நாடகத்துக்கு இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பு முற்றுப்புள்ளி வைக்கின்றது.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் பங்களிப்பை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே மோடி அரசாங்கம் பார்க்கின்றது. தமிழ்த் தலைமை ஒப்பந்தத்தை மதித்து நடக்காவிட்டால் ஒப்பந்தம் தொடர்பாக கடப்பாட்டை இந்திய அரசாங்கமும் மதிக்கப் போவதில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் உருவாக்கமான மாகாண சபையை அரசியல் தீர்வாகவே இந்திய அரசாங்கம் பார்க்கின்றது. தமிழ்த் தலைவர்கள் மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக வாவது ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தும் வரை இந்தியாவின் பங்களிப்பு சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பைத் தமிழ்த் தலைமை நாடுவதாக இருந்தால் மூன்று விடயங்களை ஏற்றுக்கொண்டாக வேண்டும். முதலாவது இலங்கை அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துதல். இரண்டாவது மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுக் கொள்ளல். மூன்றாவது இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவைத் தவிர வேறு நாடுகளைச் சம்பந்தப்படுத்தாமை. கூட்டமைப்புத் தலைமை இவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இந்தியாவிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பார்க்க முடியாது.

இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி மாகாண சபையிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். வேறு வழியில் தீர்வை அடைவதற்கு நாட்டின் சமகால யதார்த்தம் சாதகமானதாக இல்லை. மாகாண சபையை ஏற்றுச் செயற்படுத்திக் கொண்டு தொடர்ச்சியான முயற்சிக்கூடாக கட்டங்கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை அடைவதுதான் ஆக்கபூர்வமான அணுகுமுறை. அதுவே இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அரசியல். இந்த நடைமுறையில் இந்தியாவின் உதவியைப் பெற முடியும்.

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்பதும் இனப்பிரச்சினை விடயத்தில் மேற்கத்திய நாடுகளைச் சம்பந்தப்படுத்தாதிருப்பதும் புலம் பெயர் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகச் செயற்படும் கூட்டமைப்புத் தலைமையினால் சீரணிக்க முடியாதவை. இவர்கள் இதுவரை காலமும் செய்து வந்த பிரசாரத்துக்கு முரணானவை. கூட்டமைப்புத் தலைமை அதன் அகவய உணர்வுகளைப் புறந்தள்ளி இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்பது தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். அதைவிட்டு இந்தியாவின் நிலைப்பாட்டை நிராகரித்து மேற்கத்திய நாடுகளின் பக்கம் சாய்வது தமிழ் மக்களின் தலையில் மேலும் மேலும் சுமைகளை ஏற்றுவதாகிவிடும்.

மேற்கத்திய நாடுகளுக்கு இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை இல்லை. எனவே, அந்த நாடுகளின் அணியில் இணைவது இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்வதற்கே வழி வகுக்கும். தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினையையும் ஏனைய பிரச்சினைகளையும் காட்டிக் காட்டியே வழமையான எழுச்சிப் பேச்சுக்கள் மூலம் தங்கள் பதவிகளைத் தக்க வைக்கலாம். இது தேர்தல் அரசியலேயொழிய தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அரசியலல்ல. ●

**தமிழ்த் தலைவர்கள் மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக வாவது ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தும் வரை இந்தியாவின் பங்களிப்பு சாத்தியமற்றதாகவே இருக்கும்.**

# வடக்கிலும் பாதுகாப்பு பல்கலைக்கழகம் புதிய செயற்றிட்டம் மிக விரைவில்

(கொழும்பு)

வடக்கிற்கும் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படவுள்ளன. இதன் மூலம் வடக்கின் மாணவர்களுக்கும் பாதுகாப்புத்துறையில் கற்கைகளைத் தொடர வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

சேர் ஜோண் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களுக்கும் எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்படும் என பேராசிரியர் ரஞ்சித் பேரேரா கூறினார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தகவல் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் அபிவிருத்தித்துறைக்கு அறிவியல் பங்களிப்பை வழங்கும் நோக்கில் செயற்படும் எமது பல்கலைக்கழகத்தில் முப்படையைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளின் உயர் கல்விக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது.

எமது பல்கலைக்கழகத்தில் இப்போது 2 ஆயிரம் மாணவர்கள் உள்ளனர். அவர்களில் 70 பேர் வெளிநாட்டு மாணவர்கள். அவர்கள் உரிய கட்டணம் செலுத்தியே இங்கு உயர் கல்வி கற்கின்றனர்.

தற்சமயம் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களும் பரீட்சை முடிந்ததும் எமது பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்கைநெறிகளை மேற்கொள்ளலாம். பெறுபேறுகள் வரும்வரை காலத்தை வீணடிக்கத் தேவையில்லை.

எமது பல்கலைக்கழகத்தில் இணைவோருக்கு ஆங்கில அறிவு முக்கியம். எமது மாணவர்கள் அனைவருக்கும் நாம் இலவசமாக கணனிகள் வழங்குவோம். எமது பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்கள் சர்வதேச ரீதியில் ஏற்புடையவை என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

# போதை வர்த்தகத்தில் கில்லாடி; தெற்கில் பொலிஸார் வலை வீச்சு


வெலே சுதா மற்றும் மொஹமட் சித்திக் ஆகியோரைப் போன்று, இலங்கையில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் மற்றுமொருவர் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை கட்டுகஸ்தொட்டப், பகுதியில் 59 கிலோ ஹெரோயின் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டிருந்தன. நேற்று முன்தினம் மாத்தளை பலாபத்வல பகுதியில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த ஹெரோயின் தொகை மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நேற்று மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதற்கிடையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் மற்றுமொரு பிரதான வர்த்தகர் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலை உச்சியில் இராணுவ பயிற்சி



நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கையின் 2524 மீற்றர் உயரமான அதியுயர் மலையான பீதுருதாலகாலவில் (ஆங்கிலத்தில் மௌன்டெய்ன் பீட்றூ) இலங்கை இராணுவத்தின் ஓட்டப் போட்டிகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்று நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது, தென்கிழக்கு ஆசியாவில் முதன்முறையாக அமைக்கப்பட்ட அதியுயர் பிரதேச பயிற்சி நிலையமாக கருதப்படுவதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் இராணுவத்தினரும் பொதுமக்களும் ஓட்டப்பயிற்சிகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை. இலங்கையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு மாநாடு 2014 இற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக இலங்யையின் இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு நாளை 18ஆம் திகதியில் இருந்து 20ஆம் திகதிவரை இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் 66 நாடுகளின் உயர் இராணுவ அதிகாரிகள் பங்கேற்கவுள்ளதாக தயா ரட்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், வளர்ந்து வரும் நாடு என்ற வகையில் 'இலங்கையின் சவால்கள்' என்ற தலைப்பிலேயே இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் இடம்பெறும் இந்த மாநாட்டில், இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பு விடயங்கள் உட்பட்ட பல விடயங்கள் பேசப்படவுள்ளன.

அத்துடன் 66 நாடுகளினதும் பாதுகாப்பு விடயங்கள் பரிமாறிக் கொள்ளப்படவுள்ளன என்றும் தயா ரட்நாயக்க குறிப்பிட்டார்.

அத்துடன் சர்வதேசத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ளும் முயற்சியாக இந்த மாநாடு நடாத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# பௌத்த மதத்தைப் பாதுகாக்க மற்றுமொரு அமைப்பு உதயம்



(கொழும்பு)

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு ஆளும், எதிர்க்கட்சிகளைக் கொண்ட அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பௌத்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் இணைந்து செயற்படவுள்ளனர்.

பௌத்த மதத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புத்திஜீவிகளும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மாநாயக்க தேரர்களின் ஆலோசனை வழிகாட்டல்களின் அடிப்படையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர்களின் வழிகாட்டல்களுக்கு அமைய அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். பௌத்த மதத்தை பாதுகாக்கும் நோக்கில் சில சட்ட திருத்தங்களை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சாசன அமைச்சின் ஒத்துழைப்புடன் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராஜதந்திர சேவையில் ஓட்டை; அரசை மிரட்டுகிறது ஜே.வி.பி.



நாட்டின் இராஜதந்திர சேவையில் நிலவி வரும் முறை கேடுகள் தொடர்பில் அம்பலப்படுத்தப்படவுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட முக்கிய இராஜதந்திர பதவிகளை வகித்து வரும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அரசியல் சார் சிபாரிசுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் என அண்மையில் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கை வெளிவிவகாரச் சேவையின் பெரும்பான்மையான நியமனங்கள் தகுதிகளைக் கருத்திற்கொள்ளாது வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், இராஜதந்திர சேவையில் கடமையாற்றி வருவோரின் கல்வி மற்றும் ஏனைய தகமைகள் தொடர்பில் விரைவில் அம்பலப்படுத்த உள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளது உறவினர்கள் நண்பர்களே அதிகளவில் முக்கிய இராஜதந்திர பதவிகளை வகித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

எனினும், இவர்களுக்குப் போதியளவு கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பிலான தகவல்களை விரைவில் அம்பலப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

இதேவேளை, இந்த விவகாரத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர முடியுமா என ஆராய்ந்து வருகிறேன் எனத் தெரிவித்துள்ள அனுரகுமார திஸநாயக்கா, இவர் கள் வெளிவிவகார சேவையின் பரீட்சைக்கு தோற்றாமலே நியமனம் பெற்றுள்ளனர். ஜனாதிபதியின் நியமனங்கள் மாத்திரமே தகுதியை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு பொறிமுறை மாற்றம்; இந்தியத் தூதரகம் ஏற்பாடு



(கொழும்பு)

இந்திய தூதரகம் இலங்கையில் தனது பாதுகாப்புக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் பாதுகாப்பு பிரதிநிதித்துவத்தை இந்தியா அதிகரித்துள்ளது.

சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள பாதுகாப்பு உறவுகள் மற்றும் பாகிஸ்தான் கொண்டுள்ள உறவுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கேர்ணல் குரின்டெர் எஸ் லயர்ரி என்ற அதிகாரி இலங்கையின் இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு உதவி பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே பதவியில் உள்ள பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஸ் கோபாலனுக்கு உதவியாகச் செயற்படுவார்.

பாரம்பரியமாக பாதுகாப்பு ஆலோசகர்களாக கடற்படை அதிகாரி ஒருவரே நியமிக்கப்படுகின்ற போதும் முதல் தடவையாக தற்போது இராணுவ அதிகாரி ஒருவர் இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு அண்மைக் காலத்தில் சீனாவில் இருந்தும் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் இருந்தும் உயர்மட்ட படையதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர்.

இந்தநிலையில் சீனாவின் கூட்டுப்படை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் நிவ் ஷிஸொங் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது பயங்கரவாத தடுப்புப் பயிற்சிகளுக்காக ஆகக் கூடிய படைவீரர்களை சீனாவுக்கு அனுப்புமாறு கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு அமைய இந்தியா, திருகோணமலையைத் தளமாக பயன்படுத்திய நிலையில், அங்கு சீனாவின் விமான பழுதுபார்த்தல் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியதாக தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸை அழைத்து இது தொடர்பில் இந்தியாவின் கவனத்தை வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையில் இலங்கை சீனா வுடன் அவ்வாறான உடன்படிக்கை எதிலும் கைச்சாத்திடவில்லை என்று பீரிஸ் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புகலிடம் கோரிய பாக்.பிரஜைகள் நாடு கடத்த தடை உத்தரவு

இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரி தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரி வந்திருந்த பெண்ணொருவர் தன் சார்பிலும் பூசா தடுப்பு முகாமில் உள்ள அவரது குடும்பத்தவர் மூவர் சார்பிலும் தாக்கல் செய்திருந்த மனு தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தாம் பாகிஸ்தானுக்குத் திருப்பியனுப்பப்பட்டால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அடிப்படையில் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்ததாக அவர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் லக்ஷான் டயஸ் கூறினார்.

அதன்படி, இந்த விவகாரத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை எதிர்வரும் 29 ஆம் திகதி பாகிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கையை இடைநிறுத்தி வைப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான செலவீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான 7,060,883 ஆயிரம் ரூபாவும் இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்காக 967,972 ஆயிரம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மராமத்துக்குழுவின் வேலைத்திட்டங்கள் குறித்த விளக்கக்கூட்டம நேற்று முன்தினம் யாழ்.மாநகர சபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மராமத்துக்குழுவியஸ் தலைவர் கிளாபோடாயால் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாநகர சபையின் மராமத்துக் குழுவினால் 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட வீதிப்புனரமைப்பு மற்றும் திருத்தவேலைகள், வடிகால் புனரமைப்பு வேலைகள், கட்டட வேலைகள் குறித்த செலவுகள் வேலைத் திட்டங்களின் வாரியாக விளக்கப்பட்டதுடன் தரவுகளும் முன்வைக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் மராமத்துக் குழு உறுப்பினர் கொர்னேலியஸ யாழ்.மாநகர சபை செயலாளர் ரி.தர்மரட்ணம் பொறியியலாளர் சிவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டு வீதிப்புனரமைப்பு மற்றும் திருத்தவேலை, வடிகால் புனரமைப்பு வேலை, நிர்மான வேலைகள் உட்பட 19 வேலைத திட்டங்களுக்கு 7,060,883 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2014 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தில் வடிகால் மற்றும் நீரமாண வேலைகள் உட்பட ஆறு திட்டங்களுக்கு 967972 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் கார்த்திகை திருவிழாவான இன்று 'கந்தலங்காரம்' என்னும விடயம் பற்றி இரா.செல்வவடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்மன், சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி, கட்டுவன் ஸ்ரீ சிவலோகபதி ஞானவைரவர், தொண்டைமானாறு பிள்ளையார் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

◆◆◆

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் கார்த்திகைத் திருவிழாவான இன்று எஸ்.கோபிதாஸ் மாணவர்களின் வயலின் இசை, மற்றும் எஸ்.கோபிதாஸின் வயலின் இசைக் கச்சேரி ஆகியன பக்கவாத்தியம் சகிதம் இடம் பெறவுள்ளன. (42)

## முரசின் இன்றைய பலன்

(17.08.2014 ஞாயிற்றுக்கிழமை)



ஜய வருஷம் ஆவணி மாதம் 01 ஆம் திகதி.
சப்தமி / மரணயோகம்.
பரணி நட்சத்திரம் பி.ப. 05.04 வரை. பின் கார்த்திகை.
இராகு காலம 04.35 - 06.05 வரை. சுபநேரம 09.05 - 10.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முதலீடு செய்வதையும், பொறுப்பைக் கோராமல் பணம், பொருள் கொடுப்பதையும் தவிர்த்து விடுக, இலாபத்தைதந்த கோழிகள் நோயினால் வருந்துவதைக் கண்டு துயரம் ஏற்படும். |
| ரிஷபம் | குருகோசர பலன் சுபகாரியம் ஏற்பட குறுக்கீடு செய்வதினால் பொறுமை காத்தல் நன்று, நீண்ட நாட்களின் பின் நோய் குணமடைந்து மனைக்குத்திரும்புதல். |
| மிதுனம் | அவசரப்பட்டு, ஆதங்கப்பட்டு முழவினைமேற்கொள்ளாது சொல்லின் சாதக பாதகங்களை எண்ணிப்பார்க்கவும், புதியன கொள்வனவு செய்ய விழையின் நம்பகத்தன்மையை எடைபோடுங்கள். |
| கடகம் | சனிக்கு ஒருகால் ஊன முற்றவர்களுக்கு உதவி செய்து நன்மை பெறமுயலல், எதிரிகள் வகையில் தொல்லை வராமல் இருக்க எப்போதும் ஒரு கண்ணோட டம் வைத்திருங்கள். |
| சிம்மம் | நம்பிக்கையுள்ள நண்பர்கள் பெரியோர்களின் ஆலோசனையுடன் முன்னேற வழியை நாடுங்கள், மாணவர்கள் நல்ல விழுமியங்களைப் பேணுவதன் மூலம் பெற்றோர்கள் பெருமை அடைவர். |
| கன்னி | உணவுக்கட்டுப்பாட்டை பிசகாமல் மேற்கொண்டதால் நோயின் ஆதிக்கம் குறைவடைதல், கடன் பிரச்சினை தீர்வுடைய கௌவரத்தைப் பேணிக்காக்க சொத்தின் ஒருபகுதியை விற்றல். |
| துலாம் | நிலுவைகளைக் காலந்தாழ்த்தாது உடனுக்குடன் பெற்றுக் கொள்வதால் நன்மைகிட்டுதல், புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள பங்காளர்களின் ஒத்துழைப்பினை நாடுதல். |
| விருச்சிகம் | சக ஊழியர்கள் ஒத்துழைப்பு நல்கியதினால் பணியின் தேக்கம் அற்றுப்போதல், விழாக்களில் பங்குபற்ற தம்பதியர் சகிதம் கலந்து கொள்ளல். |
| தனுசு | வேலைப்பளு அதிகரித்ததால் சக ஊழியர்களை அரவணைத்து கருமமாற்ற முற்படல், பிள்ளைகளின் நடத்தைக் கோலங்கள் பண்பாக இருப்பதையிட்டு மகிழ்வுறல். |
| மகரம் | விண்ணப்பித்திருந்த வங்கிக்கடன் காலந்தாழ்த்துவதினால் துயரடைதல், தனியார் துறையினைக் கைவிட்டு அரசுப்பணியில் சேர அழைப்புக்கழதம் வரல். |
| கும்பம் | குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டபோது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதினால் சமரசம் பிறத்தல், தொழில் விருத்திக்காக கிளை நிறுவனம் ஒன்றைத்திறக்க ஆயுத்தமாதல். |
| மீனம் | உங்கள் திறமைகளை அறிந்து அதிகாரிகள் பொறுப்புக்களை சுமத்த நேரிடும், பங்குத் தொழிலில் சரி முயற்சி ஏற்படுவதைக் கண்டு விலக எத்தனித்தல். |

# கால்வாய் நோய் வடமராட்சியில் அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி பகுதிகளில் கால்வாய் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கப்பூது, குடவத்தை, துன்னாலை கிழக்கு ஆகிய பகுதிகளிலே இந்த நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்த தடுப்பூசிபோடும் வேலைகள் நடைபெற்றுவருவதாகவும், இதற்கு பண்ணையாளர்களை ஒத்துழைக்குமாறும் வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (18)


# முதியோர் சங்க பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பிரதேச மட்ட முதியோர் சங்கம் அமைப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி பிரதேச செயலக சமூகசேவைப பிரிவில் நடைபெறள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் இரண்டு முதியோர்கள் பங்குபற்றலாம் எனவும் சங்கத்தில் இணைய ஆர்வமுள்ள முதியவர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்ற முடியுமென பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (18)

# நல்லைக் கந்தனுக்கு இன்று கார்த்திகை திருவிழா



## வழிகாட்டு முருகா!

கரை மீது காதல் கொண்டு
மெத்தென்று முத்தமிடும்
கடல் தாயின் மடி மிதக்கும்
தமிழர் தாயகத்தின்
தலைநகராம் நல்லூரின்
தலை கோலான கந்தையா
வழிதடம் தோறும் வரும்
மிடி அகற்றி வழிகாட்டு முருகா!

-மண்டைதீவு மகிழ்நன்-

## முருகனுக்கு கார்த்திகை!

நல்லைக் கந்தன் நலம் பல தருவது
கார்த்திகைத் திருநாளிலே
நாடிடும் அடியார் துயரெல்லாம் தீர்ப்பது
கார்த்திகைத் தீப ஒளியினிலே
வித்தகர் கூடி வீதியில் இசை மழை பொழிவது
கார்த்திகைத் திருவிழாவிலே
துன்பம் துடைத்தருள சுந்தரிகளிருவருடன் வீதி வருவது
கார்த்திகை நன் நாளிலே
வேத இசை முழங்க வேலவன் மகிழ்வது
கார்த்திகைத் திருவிழாவிலே.

-தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்-

## ஒளியாய் நிற்பான்

ஆறு முகனுதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுங் திருக்கார்த் திகைவிழா - பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானார் நல்லூரிற்
பாரொளியாய் நிற்பான் பணி.

வள்ளி யெனுமுயிரை வாதாடி நல்லூரான்
கொள்ளும் இயல்பைக் குறித்தவிழா - உள்ளத்திற்
தெய்வீகப் பண்பைத் தெரிவிக்குந் தீர்வதனால்
உய்யும் வழியுண் டுயிர்க்கு.

-நல்லூர் கந்தன் பாமாலை-

## கார்த்திகேயனே!

கார்த்திகேயனே கந்தனே கடம்பனே கார்மயில்வாகனனே
நேர்த்தி வைத்தே பணிந்தோம் நிம்மதியைத் தாருமையா!
கீர்த்தி மிக்க வாழ்வில் நாம் சீரோடு வாழ்ந்திடவே
பார்த்திருப்போம் பழநியிலே பண்டாரக் கோலத்திலே முருகா!

நல்லூரின் நாயகனே எங்கள் ஞானவடிவேலவனே!
எல்லோரும் உனைப் பணிந்தோம் ஏற்றிமிகு வாழ்வருள்வாய்!
கல்லால மர நிழலிருக்கும் கருணையுள்ள சிவன் மகனே!
பல்லாண்டு நாம் வாழ எமக்கு பரம பதந்தந்திடுவாய்!

-கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்-

## புது நாகரீகம் ஆகாது!

மேன் மட்டங்கள் கூட மேலங்கியை
மேல்தெரியக் கழற்றியே ஆகவேண்டும்,
போன் கதைக்கவோ பொழுது போக்கவோ
புது நாகரீகமோ ஆகாது அதுவே நல்லூர்

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-



இறுதி இனிங்ஸில் மஹேல களமிறங்கியவேளை....

# கொழும்பில் இலங்கை முன்னிலை

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்று வரும் பாகிஸ்தான் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் கொழும்பு எஸ்.எஸ்.சி.யில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தொடர்ந்தது. அணியை நெருக்கடியிலிருந்து மீட்ட எஸ். அகமட் தொடர்ந்தும் அசத்தலாக ஆடி கன்னிச் சதம் அடித்தார். இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எஸ். அகமட் 127 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஹேரத் 127 ஓட்டங்களைக் கொடுத்து ஒன்பது விக்கெட்டுக்களைச் சாய்த்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹேரத்தின் சிறந்த பந்து வீச்சுப் பெறுபேறாக இது அமைந்தது.

12 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 79 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இழந்தது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மஹேல, சங்கா இணை பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்த்தினர். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சங்கக்கார 54, மஹேல ஜெயவர்த்தன 49 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் ரஹ்மான் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 165 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# அரையிறுதிக்கு தகுதி




சின்சின்னாட்டி மாஸ்டர் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு ரோஜர் பெடரர் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

அமெரிக்காவின் ஒஹியோ மாகாணத்தில் உள்ள சின்சின்னாட்டி நகரில் சின்சின்னாட்டி மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சுவிட்சர்லாந்து நாட்டு வீரர் ரோஜர் பெடரர், இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். பெடரர் கனடா நாட்டின் மிலோஸ் ராவோனிக்கை அரையிறுதியில் சந்திக்கிறார்.

இதே போன்று பெண்கள் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6-1, 6-3 என்ற செட் கணக்கில் ஜெலீனா ஜொன்கோவிக்கை எளிதில் வீழ்த்தினார். இந்தப் போட்டி 58 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

இதனை அடுத்து கரோலின் வோஸ்னியாக்கியை அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸ்எதிர்கொள்ளவுள்ளார். வோஸ்னியாக்கி 6-4,7-6 (5) என்ற செட் கணக்கில் அக்னீஷ்கா ராட்வான்ஸ்காவை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்குள் நுழைந்தார்.



# கடி மன்னனுக்கு தளர்வு

(பார்சிலோனா)

உருகுவே கால்பந்து வீரர் சுவாரசுக்கு கடிக்காக விதிக்கப்பட்ட தண்டனையில் விளையாட்டு தீர்ப்பாயம் சற்று தளர்வு அளித்திருப்பதைத் தொடர்ந்து அவர் பார்சிலோனா அணியினருடன் இணைந்து நேற்று பயிற்சியில் ஈடுபட்டார்.

பிரேசிலில் நடைபெற்ற உலக கிண்ணக் கால்பந்து போட்டியில் ஆரம்பச் சுற்றில் இத்தாலி அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது உருகுவே அணியின் முன்கள வீரர் சுவாரஸ், எதிரணியின் பின்கள வீரர் ஜியார்ஜியோ ஷிலினியின் தோள்பட்டையில் கடித்து விட்டார்.

பெரும் சர்ச்சையைக் கிளப்பிய இந்த கடி விவகாரம் குறித்து விசாரணை நடாத்திய சர்வதேச கால்பந்து சங்க (பிபா) ஒழுங்கு நடவடிக்கை குழு உடனடியாக சுவாரஸ்சை நீக்கியதுடன் 4 மாத காலம் கால்பந்து தொடர்பான எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாதெனவும் கடந்த ஜூலை 26 ஆம் திகதி தடை விதித்தது. அத்துடன் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

சுவாரஸ்சுக்கு அளிக்கப்பட்ட தண்டனை கடுமையானது என்று எதிர்ப்பு குரல் எழுப்பிய உருகுவே கால்பந்து சங்கமும், அந்த நாட்டு அதிபரும், தண்டனை பெற்று நாடு திரும்பிய சுவாரசுக்கு கதாநாயகனுக்குரிய வரவேற்பு அளித்து ஆதரவு தெரிவித்தனர். பின்னர் சில நாட்களில் தான் செய்த தவறுக்காக சுவாரஸ் வருத்தம் தெரிவித்தார்.

இதற்கிடையில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று சுவாரஸ் தரப்பில் சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த விளையாட்டு தீர்ப்பாயம் சுவாரஸ்சுக்கு அளித்த தண்டனை காலத்தை குறைக்காவிட்டாலும், தண்டனையில் சில தளர்வுகளை அவருக்கு நேற்று முன்தினம் அளித்தது. கால்பந்து தொடர்பான எந்தவித நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையையும், அணியினருடன் இணைந்து செயற்பட விதிக்கப்பட்ட தடையையும் விளையாட்டு தீர்ப்பாயம் தளர்த்தியது.

இதைத்தொடர்ந்து, லிவர்புல் கிளப்பில் (இங்கிலாந்து) இருந்து பார்சிலோனா (ஸ்பெயின்) கிளப் புக்கு சமீபத்தில் மாறியும் அணியினருடன் இணைந்து செயற்பட முடியாமல் தவித்த சுவாரஸ் நேற்று பார்சிலோனா கிளப் பயிற்சி முகாமில் இணைந்தார். காட்சிபோட்டிகளில் சுவாரஸ் விளையாட முடியும். ஆனால் அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் ஒக்ரோபர் 25ஆம் திகதி வரை சுவாரஸ் விளையாட முடியாது. மெக்சிக்கோ கிளப் அணியுடன் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும் காட்சி ஆட்டத்தில் சுவாரஸ் ஆடுவாரா? என்பது முடிவாகவில்லை. அவர் உடல் தகுதியுடன் இருந்தால் விளையாடுவார்.

# இங்கிலாந்து சிறப்பான ஆரம்பம்

(லண்டன்)

இந்திய அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் லண்டன் ஓவலில் நடைபெற்று வருகின்றது. இதில் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி இங்கிலாந்து அணியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கப்டன் டோனி தனியாளாகப் போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் கப்டன் டோனி 82, முரளி விஜய் 18, அஸ்வின் 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் வோர்ஸ், ஜோர்டன் ஆகியோர் தலா மூன்று, புரொட், அண்டர்சன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் மதிய போசனத்திற்காக நிறுத்தப்பட்ட வேளை ஒரு விக்கெட்டை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் குக் ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# விதியை மீறிய கொண்டாட்டம் பறிபோனது தங்கம்




இலக்கை அடைவதற்கு முன்னதாகவே பனியனைக் கழற்றி வெற்றியைக் கொண்டாடிய பிரான்ஸ் தடகள வீரரின் தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்தின் ஜூரிச் நகரில் ஐரோப்பிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஆடவருக்கான 3,000 மீற்றர் தடைகளோடு கூடிய குதிரைப் பந்தய ஓட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் பிரான்ஸைச் சேர்ந்த மஹிடின் மேகிஸ்ஸி பந்தய தூரத்தை 8.25.30 வினாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். மற்றொரு பிரான்ஸ் வீரர் யோன் கோவல் 2ஆவது இடத்தையும், போலந்தின் கிறிஸ்டியன் ஜலேஸ்கி 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.

ஆனால்,முதலாவதாக வந்த மஹிடின் இலக்கை அடைவதற்குள்ளேயே, கால்பந்து வீரர்களைப் போல பனியனைக் கழற்றி வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார். இது சர்வதேச தடகள சங்க விதிமுறைகளை மீறிய செயல் என்பதால், அவருக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. அத்தோடு, அவரிடம் இருந்து தங்கப் பதக்கமும் பறிக்கப்பட்டது. அவர் முன்னதாகவே இந்த பிரிவில் இரண்டு முறை உலக சம்பியின்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கங்கள் வென்றமை குறிப்பிடத்தக்கது.

மஹிடின் தகுதி நீக்கம் செய்யப்பட்டதால் யோன் கோவலுக்கு தங்கமும், கிறிஸ்டியன் ஜலேக்கிக்கு வெள்ளியும், ஸ்பெயினின் ஏஞ்சல் முலெராவுக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தன. ஸ்பெயின் தரப்பில் இருந்து மஹிடினுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்தே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. பதக்கம் நழுவியது குறித்து மஹிடின் கூறுகையில், வெற்றிப் பெருக்கில் பனியனைக் கழற்றி விட்டேன். பட்டத்தைத் தக்க வைத்ததில் பெரு மகிழ்ச்சி. இந்த செயலுக்காக மஞ்சள் அட்டை கிடைக்கும் என்று எனக்கு அப்போது தெரியாது என்றார்.

# முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு விழா




சங்கானை மத்தி கண்ணன் முன்பள்ளி




மானிப்பாய், சுதுமலை நாவலர் முன்பள்ளி (48)




திருநெல்வேலி பாற்பண்ணை கம்பன் முன்பள்ளி (48)




சுன்னாகம் ஐயனார் முன்பள்ளி (48)



காரைநகர் கல்வந்தாழ்வு ஸ்ரீ முருகன் முன்பள்ளி



யாழ். நாவலர் சோலை முன்பள்ளி




தென்புலோலி சித்திவிநாயகர் முன்பள்ளி

# பாரம்பரிய கலைகளை கொண்டாடிய "மடை" நிகழ்வு

– ஸ்ரீ.ஸ்ரீவாகீசன் –



கடந்த வருடம் ஒக்டோபர் 25, 26, 27 ஆம் திகதிகளில் திருகோணமலை உப்புவெளி வீதியில் அமைந்துள்ள சிவானந்தா தபோவனத்தில் "மடை" நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கலாநிதி சி.ஜெயசங்கரும் அவரது குழுவினரதும் சிறப்பான முயற்சியில், நாட்டின் பலபாகத்திலிருந்தும் தமிழ்மொழி பேசும் பல இனக் கலைஞர்கள் பெரும்பாலானோர் திருகோணமலை நகரில் ஒன்று கூடியிருந்தனர்.

இலங்கையின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, இறக்காமம், மலையகம், மன்னார், உடப்பு முதலிய இடங்களிலிருந்து இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர். இவர்களை ஒன்றிணைத்த முயற்சியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த விரிவுரையாளர் க.அருந்தாகரன், மலையகத்தைச் சேர்ந்த எஸ்.பிரேம்குமார் மன்னாரைச் சேர்ந்த எஸ்.உதயன், உடப்பைச் சேர்ந்த வீரசொக்கன் முதலியோர் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பப்பிரவாகன் வடமோடிக்கூத்து, பறைமேளம், வன்னியிலிருந்து கோவலன்கூத்து, பறைமேளம், ஒப்பாரி முதலியனவும் திருகோணமலையிலிருந்து சிலம்பாட்டமும், மட்டக்களப்பிலிருந்து மகுடிக்கூத்து, பறைமேளக்கூத்து, வேடுவர் சமூக இசை, சடங்குகள், அருந்ததியர் சமூக தப்பு இசை, பறங்கியர் சமூக இசை, நடனம் போன்றனவும் இறக்காமத்திலிருந்து முஸ்லிம்களின் பாரம்பரிய கலையான களிகம்பு, மலையகத்திலிருந்து காமன்கூத்து, பொன்னர் சங்கர், மன்னாரிலிருந்து வசாப்பு, வடபாங்கு, தென்பாங்கு முதலியனவும் உடப்பிலிருந்து சில பாரம்பரியக்கலைகளும் பங்குபற்றியிருந்தன.

பறங்கியருடைய கபறிஞ்ஞா இசை, நடனம், முஸ்லிம்களின் பாரம்பரிய கலையான களிகம்பு, மட்டக்களப்பு பறைமேளக் கலைஞர்களது அளிக்கைகள், யாழ்ப்பாண வன்னி பறைமேளக் கலைஞர்களது அளிக்கைகள், மூதூர் கலைஞர்களது சிலம்பாட்டம் முதலியன நகரக் கடற்கரையையே புரட்டிப்போட்டது.

கலைஞர்கள் தங்களது தனித்துவங்களை போட்டிபோட்டுக் கொண்டு வெளிப்படுத்தியது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. ஒரு இனத்தவரின் கலை அம்சங்களை மற்றுமோர் இனத்தவர் தமக்குரிய கலைகளின் சில அம்சங்களுடன் ஒப்பிட்டு மீட்டிப் பார்த்தமையையும் காணமுடிந்தது.

முல்லைத்தீவு பாரம்பரிய கலைஞர்களின் ஒப்பாரி இசை இடம்பெற்ற போது அதனைப் பார்த்திருந்த பலரும் கண்கலங்கி, அழுதமை இக்கலைகளை இன்னுமோர் படிநிலைக்கு இட்டுச்சென்றுவிட்டது. நவீன கல்வியறிவுக்குட்பட்டோரையும் இவ் ஒப்பாரி இசை தனக்குள் உள்வாங்கி ஆறுதல்படுத்தியது.

ஒவ்வொரு நாட்களிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பாரம்பரிய கலைகள் பற்றிய அறிவுப்பகிர்வும்,

இது தவிர சமுதாய கலைகளின் சின்னங்களாய், சந்ததிகள்தோறும் கையளிக்கப்படும் தோரணங்கள், மடாலயம், சடங்குப்பந்தல்கள், களரி முதலியனவும் அமைக்கப்பட்டிருந்ததுடன் கூத்து அணிகலங்களுடனான பொம்மைகள், வேறுபல காட்சிப்படுத்தல்கள் முதலியனவும் இந்நிகழ்வை காத்திரப்படுத்தின.

ஒசில் மைதானம் மற்றும் நகரக் கடற்கரையில் இப் பாரம்பரிய கலைகள் மக்கள் மத்தியில் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

ஆற்றல், திறன் வெளிப்பாடு என்ற தலைப்பிலும், கலைப்பயில்வுகளும், சவால்களும், எதிர்கொள்ளுதலும் மற்றும் பாரம்பரியக்கலைகள் பயில்வுகளும் புத்தாக்கங்களும் என்ற தலைப்புகளிலும், சடங்குகள், பத்தாசிகள், கலைகள் மற்றும் அண்ணாவியம், பனுவலாக்கம், வாத்தியக்கருவிகள் ஏற்றுதல் இணக்குதல், ஆடை, அணி, ஒப்பனை அலங்காரங்கள் என்ற தலைப்புக்களிலும் கருத்துப்பகிர்வுகளும் விவாதங்களும் இடம்பெற்றன.

இந்நிகழ்வு பாரம்பரிய கலைகளுக்கும், கலைஞர்களுக்குமான ஓர் புதிய களமாக அமைந்தது. சமுதாயக் கலைகளை சந்திக்க வைத்தும், அவற்றின் சாதனைகளை சல்லடை போடவைத்தும், சமூக சகோதரத்துவத்தை வலுப்படுத்தும் களமாக இம் மடை நிகழ்வு அமைந்தது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாட்டாளர்களாகவும், கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்கள் நிகழ்ச்சி வடிவமைப்பு, இணைப்பாளராகவும் செயற்பட்டு இம்மடை நிகழ்வு கோலாகலமாக வழிவகுத்திருந்தனர்.

இவர்களுடன் விரிவுரையாளர்கள் அ.விமல்ராஜ், கி.கலைமகள், சு.சந்திரகுமார், செ.சுந்தரேஸ் மற்றும் து.கௌரீஸ்வரன், ஓவியர் சு.நிர்மலவாசன், ந.நந்தகுமார், வி.கௌரிபாலன் முதலியோரும் நுண்கலைத்துறை மாணவர்களும் இணைந்து இதனை செயற்படுத்தியிருந்தனர்.

உலகமயமாக்கமும் பல்தேசியக் கொம்பனிகளின் தாக்கங்களும் தங்களை நிலைநிறுத்த மக்களைப் பொம்மைகள் ஆக்கிவரும் சூழலில் இப் பாரம்பரிய கலைகளே இன்றும் மக்களுக்கிடையில் இறுக்கமான உறவுப்பாலத்தையும் ஆற்றல்களையும் இணைத்து வலுச்சேர்க்கின்றன.

இப்பாரம்பரிய கலைகளுடைய பன்மைத் தன்மை, சமூகத்துவம் முதலியன சமுதாய எதிரிகளுக்கு திண்டாட்டமானவையே. இத்தகைய தன்மையினை "மடை" நிகழ்வில் பங்குபற்றியிருந்த பல இனத்தவர்களுடைய கலைகளும் எடுத்தியம்பியிருந்தன. இது இன்றைய சூழலில் தமிழ் மக்களிடையே தேவைப்படுகின்ற ஒன்றாகிறது.

இந்நிகழ்வில் இடம்பெற்ற ஒப்பாரி இசை எவ்வாறு அனைவரையும் ஓர் விடுதலைக்குட்படுத்தியதோ இதுபோல பல வெளிகளை நிரப்பக்கூடிய திறன் அனைத்து பாரம்பரிய கலைகளுக்குள்ளும் உண்டு. அதனை இனம் கண்டு வெளிப்படுத்த இன்னுமோர் "மடை" இன்றியமையாதது.

# காய்கறிகளைச் சமைக்கும் முறை!

- காய்கறிகளை வாங்கியவுடன் உபயோகிக்க வேண்டும்.
- காய்கறிகளை அரியும் முன்பே கழுவ வேண்டும். காய்கறிகளைப் பெரிய துண்டுகளாக நறுக்குவது நல்லது.
- காய்கறிகளை நறுக்கியதும் தண்ணீரில் ஊறவைக்கக் கூடாது. இதனால் விற்றமின் சத்து குறைகிறது.
- காய்கறிகளை அதிகமான நீரில் வேகவைக்கவும் கூடாது.
- காய்கறிகளை வேகவைக்கும் போது பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும்.
- காய்கறிகளைக் குறைந்த நேரம் வேகவைப்பதால். ஊட்டச்சத்துக்களைப் பாதுகாக்கலாம்.
- நீரை முதலில் கொதிக்க வைத்து பிறகு கொதிநீரில் காய்கறிகளை வேக வைக்கவேண்டும்.
- சமைக்கும்போது சோடா மா சேர்ப்பதால் விற்றமின் "பி" அழிக்கப்படும்.
- காய்கறிகளை குளிர்ச்சியான ஈரப்பசை உள்ள இடத்தில் வைக்க வேண்டும்.
- ஒருமுறை சமைத்த காய்கறிகளை மறுபடியும் சூடாக்கக் கூடாது.



என் சிறு வயதிலிருந்தே பூகம்பம், சுனாமி, எரிமலை போன்ற இயற்கைச் சீற்றங்களைப் பேரழிவுகள் என்று முத்திரையிடுவதைக் கண்டு வந்திருக்கிறேன்.

பூமித்தாய் சோம்பல் முறித்தால் பூகம்பம். பெருமூச்சு விட்டால் எரிமலை. இப்படி இயற்கையின் சில மாற்றங்கள் சீற்றங்களாக வெளிப்படுகின்றன. ஆயிரம் பேர் இறந்தால் அதைச் செய்தித்தாள்கள் பேரழிவு என்று குறிப்பிடுகின்றன. உண்மையில் அவை பேரழிவுகள் அல்ல.

சொல்லப்போனால் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு பூமி சந்தித்த சீற்றங்களைவிட இந்தச் சீற்றங்கள் குறைவுதான். இயற்கையைப் பொறுத்தவரை அதன் போக்கில் சில சுழற்சிகளைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறது.

இயற்கையின் சீற்றம்கூட உங்கள் மனிதம் உயிரோடு இருக்கிறதா? என்று பரிசோதிக்க வைக்கப்பட்ட பரீட்சை என்றே நினையுங்கள்.

தங்கள் உடமைகளை, உறவுகளை இழந்தவர்கள் துன்பத்தில் தள்ளப்பட்டிருப்பார்கள். அவர்கள் மத்தியில் போய் அமர்ந்து நாமும் துன்பத்தில் சிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனித்து சிகிச்சை தர வேண்டுமானால் அது யாரால் முடியும்? ஆரோக்கியமானவர்களால்தானே? இழந்து தவிப்பவர்களை அந்தத் துக்கத்திலிருந்து மீட்க

# சுவர்த் தத்துவங்கள்...




**(பள்ளிக்கூட மதில் சுவரில்)**
ஒரு சந்தேகத்தைக் கேட்கும்போது
ஒரு நொடி மட்டுமே
நீ முட்டாள்.
அதைக் கேட்காமல் விட்டுவிட்டால்...
வாழ்க்கை முழுவதுமே
நீ வடிகட்டிய முட்டாள்.

**(புத்தகக் கடையில்)**
வாய்ப்புகளை உருவாக்கு
வாழ்க்கையை உயர்வாக்கு

**(சுமை தூக்குவோர் சங்க கட்டடத்தில்)**
பலசாலிகளுக்குப்
பாரம் என்று ஒன்றுமில்லை.
முயற்சி உடையவர்களுக்கு
தூரம் என்று ஒன்றுமில்லை

**(தேநீர்க் கடையொன்றில்)**
உங்கள் மனதின் உயரமே
உங்கள் வாழ்வின் உயரம்

**(ஒரு கடிகாரக் கடையில்)**
விட்டு... விட்டு... துடிக்கும் இதயம்
விடாமல் துடிக்கும் எங்கள் கடிகாரம்

**(பலர் நடைப் பயிற்சி செய்யும் பூங்கா மதிலில்)**
நடப்பதெல்லாம் நன்மைக்கே!

**(ஒரு கோயில் வாசலில்)**
இங்கு அம்பாள் மட்டும் உங்களுடன் பேசட்டும்
செல் .:போனை அணைத்துவிடுங்கள்

**(மின்சார அலுவலகத்தில்)**
யாதாவ ராயினும்
மின்விதி காக்க
காவாக்கால்
சோராப்பர்

சீனாவின் பாராளுமன்றமான கட்டிக்காட்டுகின்றனர். அமெரிக்காவினதும் அதன்

ஆரோக்கியமானவர், களால்தானே? இழந்து தவிப்பவர்களை அந்தத் துக்கத்திலிருந்து மீட்க

மின்விதி காக்க
காவாக்கால்
சோகாப்பர்
மின்னடி பட்டு

(ஒரு நகைக் கடையில்)
எங்கள் பொன் நகையையும்
உங்கள் புன்னகையையும்
தேவையில்லாமல்
காட்டாதீர்கள்

(ஒரு பல் மருத்துவமனையில்)
நல்லவுனையும் தீயவராக்கும் பொன்நகை!
தீயவரையும் நல்லவராக்கும் புன்னகை!

(பலசரக்குக் கடை ஒன்றில்)
சாகாமல் இருக்க வாழ்கிறோம்
ஆனால் வாழாமலேயே சாகிறோம்

(ஒரு செல்போன் கடையில்)
வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை செல்போன்

(துணிக் கடையில்)
உங்களுக்கு கதை பேச நேரமிருந்தால்
தயவுசெய்து அதை இங்கே செலவிட வேண்டாம்.

(ஒரு மருந்துக் கடையில்)
முடியாது என்று நீங்கள்
சொல்வதையெல்லாம்
யாரோ ஒருவன்
எங்கோ செய்து கொண்டு
இருக்கிறான்

(ஒரு நூலகத்தில்)
சாதாரண மனிதன் புத்தகத்தோடு இருப்பான்
சாதனை மனிதன் புத்தகத்தில் இருப்பான்

(சலூன் ஒன்றில்)
அனுபவங்களிலிருந்துதான்
நல்ல முடிவுகள் பிறக்கின்றன.
ஆனால் நல்ல அனுபவமோ,
தவறான முடிவுகளிலிருந்துதான் கிடைக்கிறது.

# சீனாவின் பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு!

- சித்தார்த்தன் -



சீனாவின் பாராளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரசிஸ் மார்ச் முதல் வாரத்தில் தனது வருடாந்த அமர்வை நடாத்திய முதல் நாளன்று 2014ஆம் ஆண்டுக்கான தனது பாதுகாப்புச் செலவீனமாக 132 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இத்தொகை கடந்த ஆண்டு (2013) ஒதுக்கப்பட்டதை விட 12.2 வீதம் அதிகமானதென உத்தியோக பூர்வமான அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் சீன விவகாரங்களை அவதானித்துவரும் மேற்கத்தைய பாதுகாப்பு ஆய்வாளர்கள் சீனா அறிவித்ததைவிட இத்தொகை கூடுதலானது - அதாவது கடந்தாண்டை விட 40 வீதம்வரை அதிகமானது எனக் கூறியுள்ளனர்.

சீனா தனது முப்படைகளையும் மேலும் நவீனமயப்படுத்தவே பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்துள்ளது என நம்பப்படுகின்றது.

சீனா இப்பொழுது பெரும்பாலான சுதேகலங்களையும், டாங்கிகளையும், போர் விமானங்களையும், போர்க் கப்பல்களையும் உள்நாட்டிலேயே தயாரிப்பதுடன், அவற்றை மிக நவீன தொழில்நுட்பங்களுடன் தரமுயர்த்தியும் வருகின்றது.

அத்துடன் தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் துல்லியமாகச் சென்று தாக்குதல் நடாத்தக் கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் (Ballistic Missiles) அது தயாரித்துள்ளது.

சீனாவின் இந்த வளர்ச்சி அமெரிக்காவினதும், மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கி உள்ளதாக அந்நாடுகள் கருதுகின்றன. குறிப்பாக DF-21D என அழைக்கப்படும் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் சீனாவின் ஏவுகணை (Ani-Ship Ballistic Missiles) அமெரிக்கக் கடற்படைக் கலங்களுக்கு கடுமையான அச்சுறுத்தலானவை என பாதுகாப்பு நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் சீனாவிடம் சொந்தத் தயாரிப்பான 190 பெரிய போர்க்கப்பல்கள் உள்ளன. தற்போது அவை அமெரிக்காவிடம் இருப்பவற்றை விடக் குறைவாக இருப்பினும், 2020இல் அவை அமெரிக்கத் தொகையை விஞ்சிவிடும் எனக் கூறப்படுகிறது.

அதேபோல தற்பொழுது அமெரிக்காவிடம் 11 விமானம் தாங்கிக் கப்பல்களும், சீனாவிடம் ஒன்றிரண்டும் இருப்பினும், எதிர்காலத்தில் அவற்றின் தொகையையும் சீனா அதிகரித்துவிடும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

அத்துடன் இராணுவக் கட்டமைப்பிலும் சீனா சில மாற்றங்களைச் செய்து வருகின்றது. குறிப்பாக மேற்கத்தையப் பாணியில் தனது முப்படைகளையும் ஒன்றிணைக்கும் கூட்டுக் கட்டளைப்பீடம் (Joint Command) ஒன்றையும் நிறுவுவதற்கு அது தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சீனா தனது படைகளைப் பெருமளவில் நவீனமயப்படுத்தினாலும், டெங்சியாவோபிங் காலத்தில் வியட்நாமுடன் ஒரு போரில் ஈடுபட்ட பின்னர் கடந்த கால்நூற்றாண்டாக அது எந்தவொரு போரிலும் ஈடுபடாத காரணத்தால், அதன் போரிடும் ஆற்றல் எத்தகைய வலிமையானது என்பதைத் தீர்மானிக்க முடியாதுள்ளதாகச் சில மேற்கத்தைய பாதுகாப்புக் கொள்கை வகுப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சீனாவின் தொடர்ச்சியான பாதுகாப்புச் செலவீன அதிகரிப்பைத் தொடர்ந்து, சீனாவுடன் அதன் கடல் எல்லைகளில் பிரச்சினைகளைக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் நேசநாடுகளான ஜப்பான், தென் கொரியா, தய்வான், பிலிப்பைன்ஸ் என்பனவும் தமது பாதுகாப்புச் செலவீனங்களை அமெரிக்காவின் உதவியுடன் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

சீனாவைச் சுற்றிவளைப்பதுதான் அமெரிக்காவினதும் அதன் மேற்கத்தைய் கூட்டாளிகளினதும் மூலோபாயமாக இருப்பினும் உக்ரேன் சம்பந்தமாக அமெரிக்க - ரஷ்ய நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள "புதிய பனிப்போர்" அந்த நோக்கத்தில் சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக கேந்திர விவகாரங்களுக்கான நிபுணர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

"சீனம் உறங்குகிறது.
அது உறங்கட்டும்.
அது விழிக்கும் போது
உலகம் நடுங்கும்"
(நெப்போலியன் சொன்னதாகக் கூறப்படும் ஒரு கூற்று)

(நன்றி: வானவில் 42)

# வாழும் மனிதனின் வேதனைதான் பேரழிவு!



வேண்டுமானால் யாரால் முடியும்? ஆனந்தமாக இருப்பவர்களால்தானே? உள்ளே அமைதியாக, ஆனந்தமாக இருப்பவர்களானால் அந்த ஆனந்தத்தை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுத் தர வேண்டாம்.

அன்பாக இருப்பது ஆனந்தம். கருணையுடன் இருப்பது ஆனந்தம். அழுபவனுக்கு ஆறுதல் சொல்வது ஆனந்தம். பரிதவிப்பவர்களைப் பரிவுடன் அணைத்துக் கொள்வது ஆனந்தம். இழப்பைச் சந்தித்தவர்களுக்கு ஆதரவாக இருப்பது ஆனந்தம். இயலாதிருப்பவனுக்கு இதயபூர்வமாக சேவை செய்வது ஆனந்தம்.

சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எந்தப் பாதிப்பும் இல்லாமல் தன்னைப் பதப்படுத்திக் கொள்வதுதான் உண்மையான ஆனந்தம். தினந்தோறும் இப்படி ஆனந்தமாக இருக்கத் தெரியாத லட்சக்கணக்கான முகங்களைக் காண்கிறேன். அதைத்தான் பேரழிவாகக் கருதுகிறேன். இறப்பு பேரழிவு அல்ல. வாழும் மனிதனின் வலியும் வேதனையும்தான் பேரழிவு.

இந்தப் பூமியில் பிறக்கும் தருணத்திலேயே நம் மீது மரணத் தீர்ப்பு எழுதப்பட்டுவிட்டது அல்லவா? இருக்கும் சொற்ப வருடங்களை எப்படி ஆனந்தமாக்கிக் கொள்வது என்று தெரியாமல் அந்தக் குறைபட்ட நேரத்தைக்கூட வேதனையாக்கிக் கொள்பவனைவிட பேரழிவு வேறு என்ன இருக்க முடியும்?

('ஆயிரம் ஜன்னல்' நூலில் ஜக்கி வாசுதேவ்)

# அத்திப் பழமும் ஆதாம் ஏவாளும்

"அத்தி பூத்தாற்போல்" என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கலாம். அத்தி மரத்தில் எப்போதும் காய்கள் இருப்பதை பார்த்திருக்கிறோம்... பூ? முன்பு நாட்டு மருந்து கடையில் மட்டுமே கிடைத்துக்கொண்டு இருந்த அத்திப்பழம் இப்போது எல்லாக் கடைகளிலும் பதப்படுத்தப்பட்ட "அஞ்சீர்" என்று கிடைக்கிறது (அஞ்சீர் என்றால் "தேன் அத்தி" என்று பொருள்.).

எழுநூறுக்கும் மேற்பட்ட அத்தி மரங்கள் இருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. அத்திப் பூ என்பது நூற்றுக்கணக்கான பூக்கள் அடங்கிய பூங்கொத்து. இதழ்கள் மூடப்பட்டு பிஞ்சு போல இருக்கும். மேற்பகுதியில் சின்ன துவாரத்தைக் காணலாம்.

இனச் சேர்க்கைக்குப் பிறகு ஆண் குளவிகள் இறந்துவிடுகிறது. மகரந்தத்தை சுமந்து வரும் பெண் குளவிகள் அந்த சின்ன துவாரத்தின் உள்ளே நுழைகிறது. மகரந்தச் சேர்க்கை நிகழும் போது அவைகள் உள்ளே முட்டைகளை இட்டுவிட்டு இறந்துவிடுகிறது.

முட்டைகளிலிருந்து புழுக்கள் தோன்றி பிறகு அவை குளவிகளாகத் தோன்றுகிறது. இவை வளரும் போது அத்தி விதையை உண்டு வளர்கின்றன. அத்திப் பழம், ஆலம் பழங்களை உடைத்துப் பார்க்கும் போது உள்ளே பூச்சிகள் இருப்பதே இதனால் தான். அடுத்த ஒற்றுமை இதன் இலைகளைப் பறித்தால் பால் சொட்டுவது.

இந்த குளவிகளுக்குப் பிறக்கும் வீடும் சமாதியும் இந்த அத்திப் பழம் தான். குளவிகள் இல்லை என்றால் அத்தி மரம் இல்லை; அத்தி மரம் இல்லை என்றால் குளவிகள் இல்லை. இயற்கை!


ஆதாம் பாவம் செய்த பிறகு தாங்கள் நிர்வாணமாக இருப்பதை அறிந்து அத்தி இலைகளை உடையாக்கினார்கள் என்று பைபிள் சொல்லுகிறது. பல பழைய ஓவியங்களில் ஆதாம் ஏவாளை நிர்வாணமாக வரைந்த ஓவியர்கள் அத்தி இலைகளை அதன் மீது வரைந்து நிர்வாணத்தை மறைத்து "U" சேர்ட்டிபிக்கேற் வாங்கினார்கள்.

ஆதாம் ஏவாள் உடுத்திய அத்தி இலைகள் நிச்சயம் ஓரிரு நாட்களில் காய்ந்துவிழுந் திருக்கும் ஆனால் ஓவியர்கள் வரைந்த அத்தி இலைகள் இன்னும் காயாமல் இருக்கிறது!. உலகின் முதல் மரம் அத்தி மரம் தான் என்று "பிரிட்டானிகா" என்சைக்ளோபீடியா சொல்வது இதனால் கூட இருக்கலாம்.

- சுஜாதா தேசிகன் -









கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலய மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் நடாத்தப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை அலுவலர் இராஜரட்ணம் செந்தூரன் கருத்துரைகளை வழங்குவதனையும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (90)

# 51076 மெற்றிக் தொன் வெங்காயம் உற்பத்தி செய்ய யாழில் ஏற்பாடு

## யாழ். மாவட்ட செயலகம் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டிற்குள் 51 ஆயிரத்து 76 மெற்றிக்தொன் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண சின்ன வெங்காயத்திற்கு உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கேள்வி அதிகரிப்பினை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்த உற்பத்தி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் அதிகளவாக 2012ஆம் ஆண்டு, 3,816 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 57 ஆயிரத்து 225 மெற்றிக்தொன் வெங்காய உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

இந்த உற்பத்தியானது, 2013ஆம் ஆண்டு வீழ்ச்சியடைந்தது. 2013ஆம் ஆண்டு 3,813 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும், பருவம் தப்பிய மழை மற்றும் போதிய நீர் இன்மையால் வெங்காயச் செய்கைகள் அழிவடைந்தன.

இதனால், 2013ஆம் ஆண்டு 27 ஆயிரத்து 92 மெற்றிக்தொன் வெங்காய உற்பத்தியே செய்ய முடிந்தது. இதனால் வெங்காயத்தின் விலை அதிகரித்து சந்தையில் வெங்காயம் 200 ரூபா விலைக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள வெங்காயத்தின் அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யும் முகமாக வெங்காயம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படவுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (48)

# பயிற்சிப்பட்டறை

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பான இரு நாள் திறன் விருத்தி செயலமர்வு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச் செயலர் போபாலபிள்ளை நாகேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்வில் கரைச்சி,கண்டாவளை பிரதேச செயலக பிரிவுகளில் புதிதாக நியமனம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட கிராம அலுவலர்கள் பங்கு கொண்டனர்.

கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டு உரிய விளக்கங்களை வழங்கினார்கள். (90)

# மதுரகான சபாவினரின் சிறப்பு இசையரங்கம்

யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் சிறப்பு இசையரங்கம் அண்மையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் கனடாவில் உள்ள இசைக்கலைமணி கல்யாணி சுதர்சனின் ஏழிசை மதுரகான சபாவினர் வழங்கிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்தவகையில் தீபிகா சுதர்சன் வழங்கும் வீணை இசையும் துர்க்கா சுதர்சன் வழங்கும் வயலின் இசையும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட்டின் இசைக்கச்சேரியும் இடம்பெற்றன.

தீபிகா, துர்க்கா ஆகியோர் இசைக்கலைமணி கல்யாணி சுதர்சனின் புதல்விகளாவர். கல்யாணி சுதர்சன் யாழ். பல்கலைக்கழக இசைத்துறையில் விரிவுரையாற்றியவர் என்பதும் சங்கீத பூஷணம் பாலசிங்கத்தின் புதல்வி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் அமைப்பொழுங்குகளை யாழ். பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் க. கண்ணதாசனின் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தினர் மேற்கொண்டிருந்தனர். (63,48)

# மஹோற்சவம்


(அச்சுவேலி)

கம்பர்மலை வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான ஜயவருட மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 நாட்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

தினமும் பகல் வசந்த மண்டபப் பூசை மு.ப 10.00 மணிக்கும், இரவு வசந்த மண்டபப் பூசை 7.00 மணிக்கும் நடைபெறும். நடைபெறவிருக்கும் திரு விழாக்களில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளதுடன், 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

அம்பாள் அடியார்கள் அனைவரும் உற்சவ காலங்களில் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஸ்ரீ வன்னிச்சியம்மன் பேரருளைப் பெற்றுய்யுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (85)

# நல்லை ஆதீனத்தில் இன்று பீடாரோஹண பெருவிழா



இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்து நல்லூரிலே எல்லாம் வல்ல கந்தசுவாமி ஆலயத்தின் மேற்கு வீதியிலே அழகாக அமைந்திருக்கும் நல்லை திருஞான சம்மந்தர் ஆதீனத்தில் இன்று பீடாரோஹணப் பெருவிழா: ஈழமணித் திருநாட்டின் ஒரே ஒரு ஆதீனமான இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டு இன்றுடன் 47 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இந்த ஆதீனத்தின் முதலாவது குருமஹாசந்திதானம் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமசார்ய சுவாமிகளே 1966ஆம் ஆண்டு இவ்வாதீனத்தை நல்லூரிலே ஸ்தர்பித்தார். இவருடைய நல்லெண்ணத்திலே உருவான இந்த ஆதீனம் இன்று நன்கு வள்ர்ச்சி பெற்று ஒரு சிறப்புமிக்க சமய நிறுவனமாக தலை நிமிர்ந்து நிற்கிறது.

இன்று காலை இந்த ஆதீனத்திலுள்ள குருமூர்த்தி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும் விசேட தீபாராதனையும் நடைபெற்று பூசைவழிபாடுகளும் இடம்பெறும் அதைத்தொடர்ந்து திருமுறைப் பாராயணமும் வேத பாராயணமும் நடைபெற்று கொலுப்பூஜை வெகு விசேடமாக மங்கள இசையுடன் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகள் யாவும் நிறைவுக்கு வந்ததும் சுவாமிகள் பட்டணப்பிரவேசம் செய்வார்கள். குடை, கொடி, ஆலவட்டம் பிடித்து விசேட மங்கள வாத்தியம் முழங்க நல்லூர் முருகன் வீதிவலம் வந்து அருள்புரிவார் இதன் போது நல்லூர் வீதிகள் தோறும் நிறைகுடம்,குத்துவிளக்கு வைத்து சுவாமிகளுக்கு ஆராத்தி எடுத்து விசேட பாத பூசை இடம்பெறும். இன்றைய ஆடிக்கிருத்திகை நன்னாளில் நல்லை ஆதீனத்தின் பீடாரோஹண விழாவுக்கு வரு்கை தந்து சிறப்பித்த அடியார் பெருமக்கள் அனைவருக்கும் மகேஸ்வர பூசையும் வெகுசிறப்பாக நடைபெறும்.

இப்போது நல்லை ஆதீனத்தின் குருமுதல்வராக விளங்கும் இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்த பரமாசாரிய சுவாமிகள் மிகச் சிறப்பாக நல்ல முறையில் ஆதீனத்தை நிர்வகித்து வருகின்றார். தம்முடைய தொண்டையினாலேயே தொண்டு செய்து அதாவது எல்லா இடமும் கதாப்பிரசங்கம் செய்து சைவத்தையும் தமிழையும் ஓங்கி வளரச் செய்த முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் போலவே இவரும் சகல ஆலய மகாகும்பாபிஷேகங்களுக்கும் சென்று அருளாசியுரை வழங்கி வருகின்றார்.

அது மாத்திரமின்றி திருவிழாவுக்கு வருகின்ற அடியார்கள் அனைவருக்கும் தாக சாந்தியும் உண்டு. இன்று நடைபெறுகின்ற பீடாரோஹண விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த நாதஸ்வர தவில் கலைஞர்களுக்கு விசேட கௌரவிப்புக்களும் இடம்பெறும். மேலும், எல்லா அடியவர்களுக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கப்பெற்று ஆசி வழங்கும் நல்நிகழ்வுடன் விழா நிறைவுபெறும்.

ஆகவே இன்று நிகழ்கின்ற பீடாரோஹண விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அடியார்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். சைவசமயிகள் ஒவ்வொருவரும் இந்த நல்லை ஆதினத்தின் செயற்பாடுகளில் பங்கேற்று உதவுவது அவர்களது தலையாய கடமையாகும்.

**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்.**

# 75 ஆண்டு நிறைவில் இலங்கை வங்கி;

## யாழ்.நகரில் பறந்தன பலூன்கள்

## உங்களுக்கு அதிஷ்டம் எட்டியுள்ளதா?

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவினை முன னிட்டு, வடமாகாணத்தில் ஊர் வலத்துடன், பலூன் பறக்கவிடும் நிகழ்வும் இடம்பெற்றது.

இலங்கை வங்கியின் வட மாகாண பிராந்திய காரியால யத்தின் ஏற்பாட்டில் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணி யளவில் யாழ்ப்பாணம் பிரதான வங்கியில் இருந்து ஆரம்பிக் கப்பட்ட ஊர்வலம், பஸ் நிலை யத்தின் ஊடாக காங்கேசன் துறை வீதியில் சிவன் கோவில டியை சென்றடைந்து, அங்கி ருந்து, கஸ்தூரியார் வீதி வழி யாக ஸ்ரான்லி வீதியை வந்த டைந்த பின்னர், நாகவி காரை சந்தியில், பலூன்கள் பறக்க விடப்பட்டன.


450பலூன்கள் வானில் பறக்க விடப்பட்டதுடன், 90 பலூன்



களில் 1000 ரூபாவுக்கான வவுச் சர்களும் தொங்க விடப்பட்டன.

இதில் வவுச்சர்களை பெறும் அதிஷ்ட சாலிகள் இலங்கை வங்கியில் பணப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என வும் தெரிவிக்கப்பட்டது. (பா.25)

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்




வட்டுக்கோட்டை இந்து வாலி பர் சங்கத்தின் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட டதைச் சேர்ந்த போரினால் பாதிக் கப்பட்ட இளம் குடும்பம் ஒன் றிற்கு வாழ்வாதார உதவி வழங் கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் சத்தியநாதன் வித்தியா குடும்பத்திற்கே வாழ்வாதார உதவித்திட்டமாக நாற்பதாயிரம் ரூபா நிதி உதவி கடந்த புதன்கிழமை பகல் வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்க கட்டடத்தில் வைத்து வழங்கப் பட்டது.

இது வரையில் சுமார் எண் பது குடும்பங்களுக்கு வாழ் வாதார உதவியும் சுயதொழில் முயற்சி உதவியும் வழங்கப்பட் டுள்ளதாகவும் இந்து வாலிபர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்(63)

# “தமிழ்த்தேசியமும் ஊடகங்களும்” இன்று விசேட உரை

‘தமிழ்த்தேசியமும் ஊடகங் களும்’ என்னும் கருப்பொருளில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் இன்று ‘தமிழ் முற்றம்’ சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் உரை நிகழ்த்தவுள்ளார்.

‘தமிழ்முற்றம்’சஞ்சிகை வெளி யீட்டு நிகழ்வு இன்று நாவலர் கலா சார மண்டபத்தில் எழுத்தாளர் எஸ்.ஜோசப்பாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ‘அறிகை முறை மைகள் உள ஆரோக்கியம்’ பற்றி எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரனும், ‘தமிழ்த்தேசிய மும் ஊடகங்களும்’ பற்றி அரசி யல் ஆய்வாளர் நிலாந்தனும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சஞ்சி கையை திருமதி றோசம்மா வெளியிட்டு வைக்க யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறி தரன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (105)


# மானிப்பாய் லியோ கழகத்தின் பதவியேற்பு நிகழ்வு இன்று

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தின் 25ஆவது பதவியேற்பு நிகழ்வு மானிப்பாய் பிரதேச் கலாசார மண்டபத்தில் இன்று காலை 8.40மணி முதல் இடம்பெற வுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தி னராக மாவட்ட லயன் உப ஆளு நர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா,சிறப்பு விருந் தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் லயன் எஸ்.முரளிதரன் கௌரவ விருந்தினராக லயன் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். நடப்பாண் டுக்கான புதிய தலைவராக லியோ அ.சுஜிந்தர் உள்ளிட்ட புதிய நிர்வாகம் பதவியேற்கவுள்ளது.

அத்துடன் கடந்தகாலச் செயற் றிட்டங்கள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியிட்டுவைக்கப்பட வுள்ளதாக லியோக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

25ஆவது பதவியேற்பினை முன்னிட்டு 25 மக்கள் நலச் செயற்றிட்டங்கள் நிகழ்வில் வைத்து இடம்பெறவுள்ளதுடன் புதிதாக லியோக்கழகத்தில் இணைந்து கொண்டவர்கள் பதவிப்பிரமாணம் செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (48)



சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை தின நிகழ்வு தெல்லிப் பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அண்மையில் இடம் பெற்றபோது. (63)

# பதிவிறக்கப் பெட்டகம்

தான் வளர்க்கும் ஒரு நாயிடம் அதிக அன்பு வைத்திருந்த ஒரு பெண், கணவனைக் கண்டு கொள்வதேயில்லை. கோபம கொண்ட கணவன் மனைவிக்குத் தெரியாமல் நாயைத் தூக கிக் கொண்டு போய் ஒரு கி.மீ. தொலைவில் ஒரு சந்தில் விட்டு விட்டு வந்து விட்டான். வீட்டிற்கு வந்தால், அவனுக்கு முன்ன தாக அது வந்துவிட்டிருந்தது. இரண்டாம் நாள், வெகு தொலை வில் கொண்டு போய் விட்டுவிட்டு வீட்டிற்கு வந்தான். அப்போ தும் அது அவனுக்கு முன்னதாக வந்து வீட்டிலிருந்தது.

“நேர்பாதையில் செல்வதால்தான் இது சரியாக வீடு தேடி கண்டுபிடித்து வந்துவிடுகிறது’ என எண்ணிய கணவன், நாயைக் காரில் வைத்து எடுத்துக் கொண்டு “கன்னா, பின்னா’ வென்று கிடைக்கும் சந்துகளில் எல்லாம் நுழைந்து அதை ஒரிடத்தில் இறக்கிவிட்டு காரைத் திருப்பிக் கொண்டு வந்தான். அதிகமாக சுற்றியதில் அவனுக்கே வழி மறந்து போனது. மொபைலை எடுத்து, மனைவியிடம் “நாய் வந்திட்டுதா?” என்றான்.

“அது எப்பவோ வந்திட்டுது” என்றாள் மனைவி.

“அந்தச் சனியனைக் கெதியா அனுப்பிவை. எனக்கு வழி தெரியேல்ல” என்றான் கணவன்.

*** *** *** ***

கிராமத்து திரையரங்கம். படம் ஓடிக் கொண்டிருந்தது. நண்பர்களான இளைஞர்கள் கும்பலாக உட்கார்ந்து படம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அருகே ஒரு பாட்டி அவ்வப்போது, குளிர்பானப் போத்தலை எடுத்துச் சிறிது குடிப்பதும், “டொக்’கென்று தரையில் வைப்பது மாக இருந்தார். இதனால் இளைஞர்கள் எரிச்சலடைந்தனர்.

அவர்களில் ஒரு குறும்புக்கார இளைஞன் பாட்டி தரையில் வைத்திருந்த குளிர்பானத்தை ஒரே மூச்சில் குடித்து விட்டு, “பாட்டி சோடாவை இப்படித்தான் ஒரே மூச்சில் குடிக்க வேணும்” என்றான்.

பாட்டி பதறியபடி சொன்னார்:

“அட படுபாவி... நான் அந்தப்போத்தலில் அப்பப்ப வெத்திலை எச்சிலையெல்லோ... துப்பி வைச்சிருந்தன்”

*** *** *** ***

ஒரு பெரிய வியாபாரி ஒரு முறை நிறைய விலை உயர்ந்த பொருட்களோடு கப்பலில் சென்றார். அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையில் இன்னொருவரும் இருந்தார். நல்ல உயரமாகவும், குண்டாகவும், முரட்டு மீசையுடனும் இருந்த அவரைப் பார்த் ததுமே வியாபாரிக்குச் சந்தேகமாகப் போய்விட்டது. தூங்கும் நேரத்தில் விலையுயர்ந்த பொருட்களைத் திருடிவிட்டால் என்ன செய்வது? என்று யோசித்தார்.

கப்பலின் பாதுகாப்புக் களஞ்சிய அறைக் காப்பாளரிடம் சென்று, தனது சந்தேகத்தைச் சொல்லி, பொருட்களை பாது காப்புப் பெட்டியில் வைத்தார்.

பொருட்களை வைத்துவிட்டு அவர் திரும்பும்போது, களஞ் சிய அறைக்காப்பாளர் சொன்னார்:

“உங்களோடு அறையில் தங்கியிருப்பவரும் அரை மணி நேரத்துக்கு முன்புதான் உங்களைப் பற்றிச் சொல்லி தனது பொருட்களை எல்லாம் பாதுகாப்புப் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றார்”

*** *** *** ***

தற்கொலை செய்வதற்காக ஒருவர் மலை மீது ஏறிக் கொண் டிருந்தார். அப்போது கீழே ஒருவர் மேடையில் மைக்கில் பேசிக கொண்டிருந்தார். பலர் அதை கேட்டுக் கொண்டிருந்தனர். தற்கொலை செய்யப் போனவர், மலையேறுவதை சிறிது நேரம நிறுத்திவிட்டு, அந்த மேடைப் பேச்சைக் கேட்டார்.

உடனே மலையில் ஏறாமல் கீழே இறங்கி வந்து, மேடைப் பேச்சைக் கேட்க அமர்ந்துவிட்டார். இதைக் கவனித்த மேடைப பேச்சாளர், “ஏன் திரும்பி வந்துவிட்டீர்கள்? என் பேச்சு உங் களை அந்த அளவுக்குக் கவர்ந்துவிட்டதா?” என்று கேட்டார்.

அதற்கு தற்கொலை ஆசாமி சொன்னார்: “உங்களை மாதிரி இவ்வளவு மோசமாப் பேசுகிற ஆளே உயிரோடு இருக் கும்போது, நான் ஏன் சாகவேண்டும் என்று தற்கொலை எண் ணத்தைக் கைவிட்டுவிட்டுத் திரும்பிவிட்டேன்”

*** *** *** ***

புத்தரிடம் சென்று ஒரு தாய், ‘தெய்வமே, என் ஒரே மகன இறந்து விட்டான். இனி நான் வாழ வேண்டுமா? இதோ அவ னுடைய சாம்பல்...’ என்று, மகனின் அஸ்தியை காட்டி அழு தாள். உடனே, புத்தர், அவள் கையில் ஒரு, லப்–டொப்பைத் தந்து, ‘விளம்பரமே வராத ஏதாவது ஒரு சனலை, இதில் வரவழை. உன் பிள்ளை உயிர்த்தெழுவான்...’ என்றார்.

# ஜனாதிபதிமுறைமையை நீக்க சுதந்திரக்கட்சி அனுமதிக்காது



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யாது என்று கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், மகிந்த சிந்தனைகளுக்கு அமைய ஆட்சி நடாத்துவதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் தடைகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதே வேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் போராட்டம் தொடரும் என இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

# ஜனாதிபதி இரங்கல்



ஈரான் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதி கலாநிதி ஹசன் றௌஹானிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமது அனுதாப செய்தியை தெரிவித்துள்ளதாக, ஜனாதிபதி பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமான விபத்தில் இழப்புக்களை சந்தித்துள்ள குடும்பங்களுக்கான ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதிலும், விமான விபத்தில் காயமடைந்வர்கள் விரைவில் குணமடைவதற்கான பிராத்தனைகளிலும் இலங்கை அரசாங்கமும், மக்களும் தன்னோடு இணைந்துள்ளதர்கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்துமத விழுமியங்களை மதிக்கிறோம் அகழ்வாராய்ச்சித்திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

அகழ்வாராய்ச்சித் திணைக்களம் இந்து மத விடயங்களை மதிப்பதாக அகழ்வாராய்ச்சித் திணைக்கள ஆணையாளர் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அகழ்வாராய்ச்சித் திணைக்களம் இந்து உரிமைகள் தொடர்பில் மதிப்பளிப்பதில்லை என எவரே னும் குற்றம் சுமத்தினால் அவர் இலங்கையில் இல்லை என்றே அர்த்தம்.

போர் முடிவடைந்ததன் பின்னர் வடக்கில் இந்து உரிமைகள் தொடர்பிலான அகழ்வாராய்ச்சிப் பணிகளே மேற்கொள்ளப்பட்டன.

மத ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதணிகளை கழற்றுமாறு உத்தரவிடுவது அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தின் கடமையல்ல.

வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடமொன்றை உலக உரிமையாக அறிவிப்பதென்பது தன்னிச்சையாக செய்ய முடியாத ஒன்று.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களுக்கு அமைவாகவே இவ்வாறு மேற்கொள்ளப்பட முடியும். திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மற்றும் முன்னேஸ்வரம் ஆகிய ஆலயங்களை உலக உரிமை பட்டியலில் உள்ளடக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்து மதசார் விழுமிங்களுக்கு அகழ்வாராய்ச்சித் திணைக்களம் உரிய மரியாதை அளிப்பதில்லை என களனி பல்கலைக்கழக பேராசிரியர் பிரசாந்த குணவர்தன ஊடகமொன்றில் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் செனரத் திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# அளவுக்கதிகமாக குடித்ததால் வீதியில் கிடந்த விரிவுரையாளர்

(கொழும்பு)

அளவுக்கதிகமாக குடித்துவிட்டு கீழே விழுந்து கிடந்த ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். 119 என்ற அவசர இலக்கத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், மாத்தறை - ஜம்புகஹவத்தை - மெதவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றின் முன் விழுந்து கிடந்த இவரை மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதேவேளை, பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நபர் திருடன் ஒருவன் வீட்டுக்குள் நுழைய முற்படுவதாக கூறியுள்ளார். இதன்படி அங்கு சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டதில் அவர் ருகுணு பல்கலைக்கழக விரிவுரையாளர் என தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் இவர் மதுபானம் அருந்தியுள்ளார். பின்னர் நேற்றுமுன்தினம் அதிகாலை வீட்டுக்குச் சென்றவேளை அவர் பிறிதொரு வீட்டின் முன் விழுந்துள்ளார். பின்னர் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# மென்பானங்களுக்கு பாதுகாப்பு முத்திரை தடை விதித்தது நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு முத்திரை தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையினால் விடுக்கப்பட்ட கட்டளையை நடைமுறைப்படுத்துவது ஆகஸ்ட 29 வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான இடைக்கால உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெளளிக்கிழமை பிறப்பித்தது.

மென்பானங்கள், போத்தலில அடைக்கப்பட்ட நீர், எண்ணெய் வகைகள் போன்ற பல பொருட்களுக்கு பாதுகாப்பு முத்திரை ஒட்டப்படுவதை கட்டாயப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை விடுத்தது.

இந்த பாதுகாப்பு முத்திரைக்கு எதிராக அவரச மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதியரசர் ஏ.டப்ளியு.ஏ.சலாம் முன்னிலையில் ஆராயப்பட்ட போதே நீதியரசர், இடைககால தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

போத்தலில் அடைக்கப் பட்ட நீர் உற்பத்தியாளர் சங்கம உட்பட மூன்று சங்கங்களே இந்த மனுத் தாக்கல் செய்திருந்தன.

இந்த முத்திரை கட்டாயமாக்கப்பட்ட பொருட்கள், ஏற்கெனவே பல நியதிச்சட்டங்களுக்கும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கும் உட்படுகின்றன என மனுதாரர்கள் கூறுகின்றனர்.

நுகர்வோர் அதிகார சபையின அறிவுறுத்தல் பல நுகர்வுக்குப் பொருட்களின் வர்ததகத்தில் வெவ்வேறு கட்டங்களில் பாதுகாப்பு முத்திரை ஒட்டப்படுவதை கட்டாயப்படுத்துகின்றது.

நுகர்வேர் அதிகார சபையின இந்த அறிவுறுத்தல் சட்டவிரோதமானது, நியாயாதிக்கம் அற்றது செலுப்படியாகாதது எனவும், இந்த பாதுகாப்பு முத்திரையின் விலை அறிவிக்கப்படவில்லை எனவும், ஆனால் இந்த முத்திரை ஒன்றுக்கு 2 ரூபாய் அளவில் செலவாகும் எனவும் மனுதாரர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் செலவின் காரணமாக நுகர்வோருக்கும் வர்த்தகர்களும் பல பில்லியன் ரூபாவை செல வளிக்க நேரிடும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# எனது உயிருக்கு அச்சுறுத்தல் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை

## சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் ஆதங்கம்

(கொழும்பு)

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள காரணத் தினால், பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு உத்தியோகபூர்வமாக நான் கோரியிருந்தேன்.

எனினும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க நீதிமன்றில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

எனக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க நீதிமன்றில் வாக்குறுதி அளித்திருந்தார். இந்த வாக்குறுதி இது வரையில் நிறைவேற்றப்படவில்லை.

சிவில் உடையணிந்த பொலிஸ உத்தியோகத்தர்கள் வீட்டின் அருகாமையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது.

கடந்த ஜுலை மாதம் 15 ஆம் திகதி முதல் சில தடவைகள் எனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன.

நாட்டின் சாதாரண பிரஜைகள் பாதுகாப்பு அச்சுறுத்தல் என நீதிமன்றில் முறைப்பாடு செய்தால் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் சரத்தின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்படும் சட்டமே எனக்கு



வழங்கப்பட்டுள்ளது.

வனாத்தமுல்ல பிரதேசத்தில் கொலைச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு சந்தேக நபரின் சகோதரருக்கு ஆறு பேர் கொண்ட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தி உதவியாளர் சேவை கட்டமைப்பில் மாற்றம்

வடமாகாணத்தில் அபிவிருத்தி உதவியாளர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் மீளவும் பழைய சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். வடக்கில் 1999 இல் நியமனம் பெற்ற பட்டதாரி உத்தியோகத்தர்கள் 2013 இல் அபிவிருத்தி உதவியாளர் சேவைக்குள் வடக்கு மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்களது சேவை இரத்துச் செய்யப்பட்டு மீளவும் பழைய சேவைக்குள் (அபிவிருத்தி உதவியாளர், உள்ளூராச்சி உதவியாளர், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர், நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர்கள், மருத்துவ ஆவணகாப்பு அலுவலர்) ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளதாக வடமாகாண உள்ளூராட்சி அமைசின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 28.05.2013 ஆம் திகதிய மாகாண நிர்வாக சுற்றறிக்கை NP/02/2013(02) இன் பிரகாரம் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு இணங்க வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்குள் உள்ளீர்க்கப்பட்டிருந்த உள்ளீர்ப்பு இரத்துச் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே உள்ளீர்ப்புக்கு முன்னரான பதவி உயர்வு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (92)

# மீள்நியமனம் பெற முயற்சி

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளராக கடந்த 7 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி இளைப்பாறிய செயலாளர் மீள் நியமனம் பெற்று மீளவும் சேவைக்கு வருவதற்கு பலரது கையொப்பங்களைப் பெற்று வருவதாக அறிகின்றேன்.

இவ்வாறான செயற்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் ப.டொ.அன்ரன் தெரிவித்துள்ளார்.

சபையில் கடமையாற்றி சேவையின்பின் ஓய்வு பெற்று பிரியாவிடை பெற்ற பின் மீளவும் சபைக்கு வருவதற்கு வடக்கின் உயரதிகாரிகளின் கைகளைப் பிடிப்பது வருந்தத்தக்கது.

எனவே எமக்கு புதிதாக வருகை தந்து வடமாகாண முதலமைச்சரின் கோரிக்கைகளின் பேரில் பதவியிழந்த செ.ரமேஷ் அவர்களை மீளகொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வரும் சூழலில் இவ்வாறு செயற்படுவது நல்லது அல்ல என தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (92)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

# G.C.E. (O/L) Examination model Paper

## சைவசமயம்

1) உயிர்கள் அனைத்திற்கும் மேலானவன் என்பதால் இறைவனுக்கு வழங்கும் பெயர்
   1) கடவுள் 2) தலைவன்
   3) யோகி 4) மூர்த்தி

2) பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களில் ஒன்று
   1) நவராத்திரி 2) சிவராத்திரி
   3) விளக்கீடு 4) கந்தசஷ்டி

3) "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று பாடியவர்
   1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

4) உழவர் தமது தொழிலை ஆரம்பிக்கும்போது முதன்முதலாக மேற்கொள்ளும் சடங்கு
   1) ஆயுதபூசை 2) முளைப்புச்சடங்கு
   3) பொலிச்சடங்கு 4) ஏர்மங்கலம்

5) இறைவனும் இறைவியும் திருமணம் செய்த நாளாகப் போற்றப்படும் தினம்
   1) மாசிமகம் 2) தைப்பூசம்
   3) பங்குனி உத்தரம் 4) பங்குனித் திங்கள்

6) மகரசங்கிராந்தியில் கொண்டாடப்படும் பண்டிகை
   1) தைப்பொங்கல் 2) சித்திரை வருடப்பிறப்பு
   3) தீபாவளி 4) ஓணம் பண்டிகை

7) சிவதரிசன பலனை தருபவர்
   1) எச்சதத்தன் 2) பிள்ளையார் 3) சண்டேசுவரர் 4) சேக்கிழார்

8) திருமுறைகள் தொகுத்தவர்
   1) நம்பியாண்டார்நம்பி 2) இராசஇராசசோழன்
   3) சேக்கிழார் 4) வேதவியாசர்

9) பத்தாம் திருமுறையைப் பாடியவர்
   1) திருமூலர் 2) சேந்தனார்
   3) பட்டினத்தார் 4) நக்கீரர்

10) நாலாயிர திவ்விய பிரபந்தத்தை தொகுத்தவர்
   1) சேக்கிழார் 2) இராஜராஜசோழன்
   3) ஸ்ரீமந்நாதமுனிவர் 4) வள்ளுவர்

11) "சிறையாரும் மடக்கிளியே" என்ற தேவாரம் எவ்வாலயத்தின் மீது பாடப்பட்டது
   1) தோணிபுரம் 2) திருவாரூர்
   3) சிதம்பரம் 4) பழனி

12) சம்பந்தர் தந்தையின் யாகத்திற்கு பொன்வேண்ட பாடிய தேவாரம்
   1) தோடுடைய செவியன் 2) சிறையாரும் மடக்கிளியே
   3) மந்திரமாவது நீறு 3) இடரினும் தளரினும்

13) திருப்புகழ் பாடியவர்
   1) குமரகுருபரர் 2) கச்சியப்ப சிவாச்சாரியார்
   3) அருணகிரிநாதர் 4) அபிராமிப்பட்டர்

14) சேக்கிழார் எந்த அரசனின் ஆட்சிக்காலத்தில் முதலமைச்சராக இருந்தார்
   1) அநபாயசோழன் 2) இராஜராஜசோழன்
   3) இராசேந்திரசோழன் 4) குளக்கோட்டன்

15) தடுத்தாட்கொண்ட புராணத்தின் காப்புச் செய்யுள்
   1) திகட சக்கர......... 2) திருவாக்கும் ......
   3) உலகெலாம் ...... 4) நமச்சிவாய வாழ்க....

16) முருகனின் திருத்தக்க புகழைக் கூறுவது
   1) தேவாரம் 2) திருவாசகம்
   3) பராபரக்கண்ணி 4) திருப்புகழ்

17) பறளை விநாயகர் ஆலயம் அமைந்துள்ள இடம்
   1) சுழிபுரம் 2) சுன்னாகம்
   3) யாழ்ப்பாணம் 4) மானிப்பாய

18) சங்கமம் என்பது
   1) இலிங்கம் 2) சிவனடியார்
   3) குரு 4) இறைவன்

19) தானாகத் தோன்றிய இலிங்கம்
   1) காணலிங்கம் 2) மானிடலிங்கம்
   3) சோபிதலிங்கம் 4) சுயம்புலிங்கம்

20) ஈழத்து ஈஸ்வரம் என எதனை அழைப்பர்
   1) கேதீஸ்வரம் 2) முன்னேச்சரம்
   3) கோணேஸ்வரம் 4) முனீஸ்வரம்

**21 தொடக்கம் 24 ஆம் வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடை எழுதுக**

A - திருஞானசம்பந்தர் E - உத்தமசோழபல்லவன்
I - திருப்புகழ்
B - திருநாவுக்கரசர் F - ஆளுடையபிள்ளையார்
J - பெரியபுராணம்
C - சேக்கிழார் G - மருணீக்கியார்
K - வைகாசி மூலம்
D - அருணகிரிநாதர் H - முருகபக்தர்
L - சித்திரைச் சதயம்

21) சமய முதற்குரவரின் இயற்பெயரின் சரியான ஒழுங்கு
   1) B,G 2) A,F
   3) C,E 4) B,F

22) தோத்திரப்பாடலைப் பாடியவரை ஒழுங்குபடுத்தினால்
   1) D,I,F 2) C,F,I
   3) D,F,I 4) D,H,I

23) பொதிச்சோறு பெற்ற நாயனார்
   1) A,F 2) C,H
   3) B,G 4) D,F

24) பன்னிரண்டாம் திருமுறையைப் பாடியவர் ஒழுங்கில்
   1) C,F 2) C,G
   3) D,H 4) B,H

25) நாவுக்கரசரை கல்லோடு கட்டிக் கடலில் போட்ட போது பாடிய தேவாரம்
   1) தோடுடைய செவி... 2) சொற்றுணை வேதியன் ....
   3) மந்திரமாவது நீறு .... 4) திருவே என் செல்வமே ...

26) ஆயுதபூசை நடைபெறும் நாள்
   1) சிவராத்திரி 2) விஜயதசமி
   3) வருடப்பிறப்பு 4) தைப்பொங்கல்

27) சமணர்களால் துன்புறுத்தப்பட்டவர்
   1) சம்பந்தர் 2) சுந்தரர்
   3) அப்பர் 4) மாணிக்கவாசகர்

28) சண்டேசுவரரின் இயற்பெயர்
   1) விசாரசருமர் 2) மருணீக்கியார்
   3) ஆளுடைய அடிகள் 4) சடையனார்

29) விரதம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறியவர்
   1) திருமூலர் 2) ஆறுமுகநாவலர்
   3) சேக்கிழார் 4) சேர். பொன். இராமநாதன்

30) ஆழ்வார்கள் எத்தனை பேர்

1) 12 2) 10
3) 9 4) 15

31) பஞ்சாட்சர மந்திரம் பின்வருவனவற்றுள்

1) சூரியமந்திரம் 2) பிரணவமந்திரம்
3) சரவணபவ 4) சிவாயநம

32) மாத விரதங்கள் உள்ளடக்கப்பட்ட தொகுதி

1) கௌரிவிரதம், கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி
2) கந்தசஷ்டி, திருவெம்பாவை, மாசி மகம்
3) தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம்
4) திருவாதிரை, பரணி, கார்த்திகை

33) தேவாரத் திருப்பாடல்கள் அமைந்த ஏடுகள் எங்கே பூட்டப்பட்டிருந்தன?

1) மதுரை 2) தில்லை
3) திருவாரூர் 4) தோணிபுரம்

34) யாழ்முரி எனக் கூறப்படும் தேவாரம் எது?

1) மந்திரமாவது நீறு 2) சொற்றுணை வேதியன்
3) சிறையாரும் மட 4) மாதர்மடப்பிடியும்

35) ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரத்தின் இறைவி பெயர்

1) பூலோகநாயகி 2) மீனாட்சி
3) கௌரியம்மன் 4) சிவகாமசுந்தரி

36) கல்நந்தி ஐயர் கொடுத்த புல்லை சாப்பிட்ட ஆலயம் எது

1) ஒட்டிசுட்டான் தான்தோன்றிச்சரம்
2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
3) கண்ணகி அம்மன் ஆலயம்
4) நல்லூர் முருகன் ஆலயம்

37) கண்ணைக்கொத்தி காக்கை பிள்ளையார் என்று கூறும் ஆலயம்

1) களுதாவளை பிள்ளையார் 2) பாறளை பிள்ளையார்
3) பரராயசேகரப் பிள்ளையார் 4) மாமாங்கப் பிள்ளையார்

38) "இராவணன் மேலது நீறு" என்று பாடியவர்

1) சம்பந்தர் 2) அப்பர்
3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

39) உமாதேவியாருக்கு கைலாயத்தில் மலர் பறித்த இரு சேடிப் பெண்கள்

1) கமலினி, அறிந்திதை 2) சுந்தரவல்லி, அமுதவல்லி
3) தெய்வானை, வள்ளி 4) சித்தி, புத்தி

40) பெரியபுராணத்திற்கு "உலகெலாம்" என்று அடியெழுத்துக் கொடுத்தவர்

1) பிள்ளையார் 2) சேக்கிழார்
3) சிவபெருமான் 4) கச்சியப்பர்

### பகுதி - 2

01)

1) தோத்திரப்பாடல்கள் 3 தருக?

2) விழுமியப் பண்புகள் 4 தருக?

3) பஞ்சபுராணம் ஓதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

4) விவசாயிகள் மேற்கொள்ளும் சடங்குகள் எவை?

5) சமய குரவர்களில் அப்பர் செய்த அற்புதங்கள் 3 தருக?

6) தான்தோன்றீச்சர ஆலயங்களின் பெயர்களைத் தருக.

7) சித்திரைப் புத்தாண்டில் மேற்கொள்ளும் கருமங்கள் 3 தருக.

8) சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் யாவர்? அவர்கள் சேர்ந்து செய்த அற்புதங்கள் எவை?

9) நாம் வீட்டில் இறை சிந்தனையுடன் ஆற்றும் கருமங்கள் 4 தருக.

10) கடவுளுக்குரிய இரு நிலைகள் எவை?

**02) பின்வரும் திருப்பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையின்றிப் பாடியவர், தலம், பொருள் என்பவற்றை எழுதுக.**

1) சிறையாரும் மடக்கிளியே.... 2) இடரினும் தளரினும்....
3) வேயுறு தோளிபங்கன் .... 4) திருவேயென் செல்வமே .....

**பின்வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

03) "விரதங்களும் பண்டிகைகளும் சைவமக்கள் வாழ்வில் பின்னிப்பிணைந்தவை"

1) விரதம் என்றால் என்ன?

2) மாத விரதங்கள் நான்கு தருக.

3) சித்திரை வருடப்பிறப்பின் நிகழ்வுகளை ஒழுங்காகத் தருக.

04) "பூமியர்கோன் வெப்பொழிந்த புகலியர் கோன்கழல் போற்றி"

1) பூமியர்கோன் யார்? புகலியர் கோன் யார்?

2) திருநாவுக்கரசரின் பெற்றோர் பெயர்களை எழுதுக.

3) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் 4 தருக.

05) "ஏகன் அனேகன் இறைவனடி போற்றி"

1) கடவுளுக்குரிய இரு நிலைகள் எவை?

2) கடவுள் ஒருவனே உண்மையென்பதை ஆதாரத்துடன் விளக்குக.

3) எண்குணங்கள் எவை?

06) "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே...."

1) சைவ சமயி ஒருவனிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள் 5 எழுதுக.

2) பெரியபுராணத்தின் முதன் நூல், வழி நூல் என்பவற்றை எழுதுக

3) தடுத்தாட்கொண்ட புராணத்தில் இறைவனின்தோற்றத்தினை சுருக்கமாக எழுதுக.

அன்றாட வாழ்வில் பயன்படுத்தும்
முக்கிய தமிழ்ச் சொற்களுக்குரிய
சிங்களச் சொற்கள்

| முக்கிய பதம் | சிங்களத்தில் |
|---|---|
| (1) நேற்று | ஈயே |
| (2) இன்று | அத |
| (3) நாளை | ஹெ(ட்)ட |
| (4) தயவு செய்து | கருணாகர. |
| (5) அழகான | லஸ்ஸன |
| (6) நல்ல | ஹொந்த |
| (7) நல்லது | ஹொந்தாய் |
| (8) காலை | உதே |
| (9) பகல் | தவல் |
| (10) மாலை | சவச |
| (11) இரவு | ரா(த்)திரிய |
| (12) முற்பகல் | பெரவறு |
| (13) பிற்பகல் | பஸ்வறு |

| உணவு வகை | |
|---|---|
| (1) சோறு | b(பத்) |
| (2) பாண் | பாண் |
| (3) ரொட்டி | ரொட்டி |
| (4) பிட்டு | பிட்டு |
| (5) அப்பம் | ஆப்ப |
| (6) பாற்சோறு | கிரி(b)பத் |
| (7) தோசை | தோசே |
| (8) பயறு | முங்அட |



அருள்மிகு கைதடி நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய தீர்த்தத்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது..... (51)

# நிலத்தடி நீர் கலப்படம் குறித்து அமைச்சர் தலைமையில் ஆராய்வு



(உடுவில்)

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுன்னாகம் பகுதியில் மின் உற்பத்தி நிலையங்களால் அப்புறப்படுத்தப்படுகின்ற கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் நிலத்தடி நீரில் கலப்பதாக அப்பகுதி மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் நேற்று முதற்கட்ட விசேட கலந்துரையாடலொன்று உடுவில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன், குடிநீர்வாரியம், நீர் வழங்கல் சபை, மின்சார சபை, இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கிராம அலுவலர்கள், மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கடந்த 12ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சரது தலைமையில் நடைபெற்ற யாழ். மாவட்டத்தில் நிலவும் வறட்சி தொடர்பிலான ஆய்வரங்கின் போது மேற்படி விடயம் தொடர்பில் அவதானஞ் செலுத்தப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று இவ் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இவ்விடயம் தொடர்பில் விஞ்ஞான ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக மின் உற்பத்தி நிலையங்களின் சுற்றாடலை ஆராயும் செயற்பாடுகள் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்பற்று கவிஞனுக்கு பிரதேச செயலர் பாராட்டு

(மானிப்பாய்)


பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த எழுத்தாளர் க.தெய்வேந்திரம் தேசிய இலக்கிய விழாவை முன்னிட்டு கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றமையை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் பாராட்டியுள்ளார்.

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிர்தேச செயலக திறந்த வெளி கலைஞர்களுக்கான கவிதைப் போட்டியில் கோவலன் கண்ணகி காப்பியத்தை 'சிலம்பின் உதை பாண்டியன் வதை' எனும் தலைப்பில் கவிதையாக வடித்ததற்கே தேசிய இலக்கிய விழாவில் கலைமணி க.தெய்வேந்திரத்தினைப் பாராட்டியுள்ளார்.

பிரான்பற்று கலைமணி க. தெய்வேந்திரத்திற்கு கடந்த வருடம் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவர் இந்து ஸ்தலங்களைப் பற்றிய முந்நூறு தோத்திரப் பாடல்களையும் பாடி மேலும் பல விருதுகளைப் பெற்றுள்ளார். (92)

# வடக்கு மக்களின் மனங்களை களிப்பூட்டும் வியத்தகு நிகழ்வுகள்

## 'எலிபன்ட் ஹவுஸ்' அனுசரணையில்





இலங்கையில் அனைவராலும் விரும்பப்படுகின்ற பான வகைகளை உற்பத்தி செய்து வருகின்ற எலிபன்ட் ஹவுஸ் நிறுவனம் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள மக்கள் மத்தியில் வியப்பூட்டும் அம்சங்கள் நிறைந்த பல்வேறு வகையான போட்டிகள் அடங்கிய களியாட்ட நிகழ்வுகளை அண்மையில் முன்னெடுத்திருந்தது.

இத்தகைய வியப்பூட்டும் போட்டிகள் அடங்கிய களியாட்ட நிகழ்வுகள் எலிபன்ட் ஹவுஸ பான வகை உற்பத்திகளைத் தொடர்ந்தும் அருந்தி மகிழும் எமது விசிறிகளுடன் நாம் ஒன்றுபடுவதற்கு எமக்கு இடமளிக்கின்றன என்று எலிபன்ட் ஹவுஸ் நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவின் தலைமை அதிகாரியும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் உதவித் தலைமை அதிகாரியுமான மிந்த கம்லத் குறிப்பிட்டார்.

இளையோர், முதியோர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் மகிழ்விக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வியப்பூட்டும் போட்டிகள், இசை நிகழ்வுகள் அடங்கிய களியாட்ட நிகழ்வுகள் கட்டம் கட்டமாகப் பல்வேறு முக்கிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கடந்த யூலை மாதம் 14 ஆம் திகதியன்று யாழ்ப்பாண நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் களியாட்ட நிகழ்வு வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிகள் உள்ளிட்ட அனைத்து முக்கிய இடங்களிலும் கட்டம் கட்டமாக இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக கிழக்கில் இந்த நிகழ்வுகள் திரு கோணமலை மாவட்டத்திலுள்ள திருகோணமலை, கந்தளாய், மூதூர் உள்ளிட்ட பல்வேறு முக்கிய இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில், மட்டக்களப்பு, செங்கலடி, ஏறாவூர், ஓட்டமாவடி, காத்தான்குடி, வாழைச்சேனை மற்றும் கொக்கட்டிச்சோலை உள்ளிட்ட இடங்களில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பின்னர் அம்பாறை மாவட்டத்தில், கல்முனை, அம்பாறை, நிந்தவூர், சம்மாந்துறை போன்ற இடங்களிலும், இறுதியாக வவுனியா மற்றும் மன்னார் ஆகிய நகரங்களிலும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

வியப்பூட்டும் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகளை வெல்வதற்காக பெருந்திரளான எலிபன்ட் ஹவுஸ் உற்பத்திகளின் சுவைப்பிரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றி, போட்டியாளர்களை உற்சாகப்படுத்தியும் தமது ஆதரவை வழங்கினர்.


இசை நிகழ்வுகளில் பங்குபற்றிக் களியாட்டமாகத் தமது பொழுதைப் போக்கி மகிழ்வதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக அங்கே ஒன்றுகூடியிருந்தனர்.

நாம் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் முன்னெடுத்துள்ள இந்த வியப்பூட்டும் போட்டிகள் உள்ளிட்ட களியாட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஒவ்வொரு நகரத்திலும் மக்கள் எமக்கு உற்சாகமான வரவேற்பளித்தமை மிகுந்த மனநிறைவளிக்கின்றது.

அவர்கள் தமது நண்பர்கள் மற்றும் குடும்பத்தவர்களுடன் இணைந்து இந்த நிகழ்வுகளில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றி எலிபன்ட் ஹவுஸ் பான வகை உற்பத்திகளைத் தாங்கள் எந்த அளவிற்கு நேசிக்கின்றனர் என்ற நம்பிக்கையை மீண்டும் ஒருமுறை எம்மிடம் வெளிப்படுத்தியுள்ளனர்.

நெக்டோ மற்றும் ஒரேன்ஜ் பார்லி ஆகிய உற்பத்திகள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்களின் விருப்பத்திற்குரிய பான வகைகளாகத் திகழ்ந்து வருகின்றன.

இதைப் போலவே நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் நுகர்வோர் மத்தியில் எலிபன்ட் ஹவுஸ் கிறீம் சோடா, ஒரேன்ஜ் கிரஷ், லெமனேட் மற்றும் EGB ஆகிய உற்பத்திகளையும் ஊக்குவிப்பதில் எலிபன்ட் ஹவுஸ் நிறுவனம் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளது என்று சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் நிறுவனத்தின் பான வகை உற்பத்திகளுக்கான தலைமைச் சந்தைப்படுத்தல் அதிகாரியும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தின் உதவித் தலைமை அதிகாரியுமான நிரஞ்சன் பலிப்பான குறிப்பிட்டார்.




தென்கொரியாவின் தெற்கு சீயோலிற்கு வருகைதந்த போப் பிரான்சிஸ், குழந்தை ஒன்றை ஆசீர்வதித்தார்

# அழிவின் விளிம்பில் சீனப் பெருஞ்சுவர்

(பீஜிங்)

உலகின் ஏழு அதிசயங்களில ஒன்றாக இடம் பெற்றுள்ள சீனப பெருஞ்சுவர் கி.பி. மூன்றாம் ஆண்டில் இருந்து 17ஆம் ஆண்டு வரை சுமார் 1400 ஆண்டு காலம் அந்நாட்டை எதிரிகளின் படையெடுப்பில் இருந்து காக்கும் தடுப்பு அரணாக கட்டப்பட்டது.

20 ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்தை தாண்டி நீண்டு செல்லும் இந்த சுவர் உலகின் தொன்மை வாய்ந்தது.எனினும், மிங் வம்சத்தினரின் ஆட்சிக்காலத்தில் (1368-1644) கட்டப்பட்ட இந்த சுவரின் ஒரு பகுதியில் சுமார் 90 சதவீதம் சிதைவமடைந்து வருவதாக தெரியவந்துள்ளது.



சீனப் பெருஞ்சுவரை பார்க்க வரும் ஒவ்வொரு வெளிநாட்டு சுற்றுலா பயணியிடமும் 17 அமெரிக்க டொலர்களை கட்டணமாக வாங்கும் அரசாங்கம் இந்த வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த கலைப் பொக்கிஷத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும் எனவும் அந்த இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# உலகத்தை அச்சுறுத்தும் "எபோலா"

## ஆறு மாதத்தில் கட்டுப்படுத்த முடியும்

## நிபுணர்கள் தகவல்

(ஜெனிவா)

உலகளவில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் எபோலா நோயை கட்டுப்படுத்த இன்னும் 6 மாத காலமாகும். போர்க்கால அடிப்படையில் இந்த நோயை விரட்ட வேண்டும். அதற்கு சர்வதேச நாடுகளும் அவற்றின் மருத்துவ நிபுணர்களின் ஒத்துழைப்பும் அவசியமானது என 'எம்.எஸ்.எப்.' நிறுவனத்தின் தலைவர் ஜோன்னே வியூ தெரிவித்துள்ளார்.

'எபோலா' வைரஸ் காய்ச்சல் நோய் மேற்கு ஆபிரிக்காவில் லைபீரியா, நைஜீரியா, கினியா, சியாரா லோன் ஆகிய நாடுகளில் கடுமையாக பரவியுளளது.

இந்நிலையில் சர்வதேச 'எம்.எஸ்.எப்.' நிறுவனத்தின் தலைவர் ஜோன்னேவியூ 10 நாள் சுற்றுப்பயணமாக மேற்கு ஆபிரிக்காவிற்குசென்றுள்ளார்.

எபோலா நோய் பாதித்த நாடுகளை அவர் பார்வையிட்டார். அதன் பின்னர் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர், "இந்த



நோய்த்தாக்கம் மிகக்கடுமையாக உள்ளது. எனவே நோயைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை எபோலா வைரஸ் பரவலை தடுப்பதற்கான புதிய தடுப்பு மருந்தை கனேடிய அரசாங்கம், உலக சுகாதார மையத்திடம் வழங்க உள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கனேடிய அரசு கூறியதாவது, முதல்கட்டமாக இந்தத் தடுப்பு மருந்தினை 800 முதல் 1,000 பேருக்கு வழங்க உள்ளோம்.

மேலும் விலங்குகளிடம் மட்டுமே சோதனை செய்யப்பட்டுள்ள இந்தத் தடுப்பு மருந்தை பயன்படுத்துவதில் தவறில்லை என உலக சுகாரதார மையம் கூறியதன் பேரில், இந்த மருந்து உபயோகிக்கபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தத் தடுப்பு மருந்தை எபோலா பாதிப்பு நிறைந்த பகுதிகளில், பணியாற்றும் சுகாதாரத்துறை பணியாளர்களுக்கு வழங்குவது அவசியம் என கனடா சுகாதாரத்துறையின் துணைத்தலைவர் கிரகோரி டெய்லர் கூறியுள்ளார்.

# தங்கத்தை பயன்படுத்தி புற்றுநோய்க்கு சிகிச்சை

## ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு

(லண்டன்)

தங்கத்தின் மூலக்கூறுகளை ரேடியோ தெரபி சிகிச்சை தொழில்நுட்பத்தின் மூலம் புற்றுநோய் மூலக்கூறுகளுக்குள் செலுத்தினால் புற்றுநோயை குணப்படுத்தலாம் என்று கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழக நிபுணர்கள் கூறுகின்றனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிளியோபிளாஸ்டோமா மருத்துவ முறை மூலம் ரேடியோதெரபி சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தச் சிகிச்சை முறையினால் .நோயாளிகளுக்கு பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படுகின்றன. அத்துடன் உயிர் இழப்பும் ஏற்படுகிறது. புற்று நோய்க்கு மாற்றுச்சிகிச்சை முறைகளை மேற்கொள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தங்கத்தின் மூலக்கூறுகளை வைத்து ஆய்வு கூடத்தில் பரிசோதனை மேற்கொண்டனர்.

வழக்கமான கீமோதெரபி சிகிச்சையின்போது தங்கத்தின் மூலக்கூறுடன் சிஸ்பிளாடின் என்ற நானோ மூலக்கூறையும் இணைத்து ஆய்வு மேற்கொண்டனர். இவற்றில் உருவான எலக்ட்ரான்கள், மனிதனின் உடலில் உள்ள புற்றுநோய் செல்களின் டி.என்.ஏ.வை அழித்தன. இதன்மூலம் புற்றுநோயைக் குணப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# காஸாவில் தொடர்கிறது போர் நிறுத்த ஒப்பந்தம்

(காஸா)

இஸ்ரேல் - "ஹமாஸ்" பயங்கரவாதிகள் இடையே பின்பற்றப்படும், ஐந்து நாள் போர் நிறுத்தம் நேற்று,முன்தினம் இரண்டாவது நாளாக தொடர்ந்தது. இருதரப்பிலும் எவ்வித தாக்குதலும் நடைபெறவில்லை.

ஆனால், காஸா பகுதியில், பலஸ்தீனியர்களின் ரொக்கெட் தாக்குதலை தடுத்து நிறுத்தவும், அதற்கு தக்க பதிலடி கொடுக்க வலியுறுத்தியும், 10 ஆயிரத்திற்கும் மேறபட்ட இஸ்ரேலியர், டெல் அவிவ் நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இருதரப்பிலும் சண்டை தொடங்கிய பின், இஸ்ரேலில் நடத்தப்பட்ட முதல் ஆர்பபாட்டம் இது தான். இதற்கிடையே, இரு தரப்பிற்கும் இடையே நிரந்தர சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்த, எகிப்து நாட்டின் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# இந்தியாவில் முதல்தடவையாக தூக்கிலிடப்படும் இரு பெண்கள்

மகாராஷ்ராவைச் சேர்ந்த சகோதரிகள் இருவர், பச்சிளம் குழந்தைகளைக் கடத்தி பிச்சை எடுக்கவைத்து பின்னர் கொலை செய்ததற்காக தூக்கிலிடப்படவுள்ளனர்.

மகாராஷ்ரா மாநிலம் கோலாப்பூரைச் சேர்ந்த சகோதரிகளான ரேணுகா கிரண் ஷிண்டே, சீமா மோகன் காவித் இருவரும் பச்சிளம் குழந்தைகளை கடத்திச் சென்று பிச்சை எடுக்க வைப்பதைத் தொழிலாக செய்து வந்துள்ளனர்.

இவ்வாறு, மொத்தம் 13 குழந்தைகளை கடத்திச் சென்று பிச்சை எடுக்க வைத்த இவர்கள், தங்கள் தொழிலுக்கு ஒத்துவராத 9 குழந்தைகளை படுகொலை செய்து வீசியுள்ளனர்.

2001ஆம் ஆண்டு, இந்தக் கொடூரக் குற்றத்துக்காக இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த தண்டனையை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்ததையடுத்து, ஜனாதிபதியிடம் கருணைமனுவை சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால், அவர்களது மனுவை ஜனாதிபதி நிராகரித்ததையடுத்து, அவர்கள் தூக்கிலிடப்படுவது உறுதியாகியுள்ளது.

# நேபாளத்தில் நிலச்சரிவு

(காத்மாண்டு)

நேபாளத்தில் பெய்த பலத்த மழை மற்றும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த நிலச்சரிவில் சிக்கி, 23 பேர் உயிரிழந்தனர். நிலச்சரிவில், சுர்கேட் மாவட்டம் பலத்த சேதம் அடைந்தது. பல இடங்களில், ஏராளமானோரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈராக்கில் மதம் மாற மறுத்த 80 பேர் சுட்டுக்கொலை

(பக்தாத்)

ஈராக்கில் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பல நகரங்களை சன்னி பிரிவு 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் பிடித்துள்ளனர். தற்போது குர்தீஷ்தானிலும் பல இடங்களை இவர்கள் கைப் பற்றியுள்ளனர்.

அங்கு மைனாரிட்டியாக வாழும் 'யாஷிடி' என்ற பூர்வீக குடிமக்களையும், கிறிஸ்தவர்களையும் இஸ்லாம் மதத்துக்கு மாறுங்கள், இல்லாவிடின் கொன்று விடுவோம் என மிரட்டி வருகின்றனர்.

இதனால் அஞ்சும் சுமார் 50 ஆயிரம் பேர் சிஞ்சார் மலையில் பதுங்கியுள்ளனர். அவர்களுக்கு அமெரிக்க இராணுவம் தண்ணீர் மற்றும் உணவு வழங்கி வருகிறது. இன்னும் பலர ஊர்களில் தங்கியுள்ளனர்.




சிஞ்சார் அருகே 'கோசோ' என்ற இடத்தில் 'யாஷிடி' இனப் பூர்வீக குடிமக்கள் உள்ளனர். அங்கு புகுந்த தீவிரவாதிகள் அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டினர்.

அவர்களை ஒரு இடத்தில் அடைத்து வைத்தனர். இஸ்லாம மதத்துக்கு மாறும் படி 5 நாட்களாக சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் பிறகும் அவர்கள் மதம் மாற மறுத்து விட்டனர்.

அதன் பின்னர் கோசோ கிராமத்தில் ஒரு பள்ளிக்கு அவர்களை அழைத்துச்சென்று ஆண்கள் 80 பேரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

மேலும், 'யாஷிடி' இனப்பெண்கள் மற்றும் குழந்தைகளை தல் அபிள் நகருக்கு கடத்திச்சென்று விட்டனர். அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை.

# படையினரின் ஏற்பாட்டில் மல்லிகைத்தீவு கிராமத்திற்கு குடிநீர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராமத்திற்கு புதுக்குடியிருப்பு 68 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் நீர்த்தாங்கி வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி வணக்கத்திற்குரிய மெகுகொட அபேதிஸ்ஸ சுவாமியின் ஆசியுடன் பெப்பிலியான கனேத்திராதேவி பயிற்சிக் கல்லூரியால் நடாத்தப்படுகின்ற வெளிவாரியான பணித்திட்ட நிதியுதவியுடன் இந்த மக்களுக்கான குடிநீர் போத்தல்களும், தாங்கிகளும் மல்லிகைத்தீவு கிராமத்திற்கும் வேணாவில் கிராமத்திற்கும் புதுக்குடியிருப்பு இராணுவத்தளபதி கேணல் வனசிங்க ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுக்கு கிராம உத்தியோகத்தர் மாகாணசபை உறுப்பினர், இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (40)



காலஞ்சென்ற சுப்பையா ஜெகநாதனின் பூதவுடலுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இறுதிஅஞ்சலி செலுத்தினார்.

நேற்று கோம்பையன் மணல் இந்து மயான மலர்ச்சாலைக்கு சென்று அமைச்சர் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தனது அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டதுடன் அன்னாரது இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டார்.

# வருடாந்த விளையாட்டு விழா

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா 18ஆம் திகதி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திருமதி வசந்தி அரசரட்ணம் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ராஜா ரணசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

### தன்னம்பிக்கை...

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை இன்று நாடெங்கிலும் நடைபெறுகின்றது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 12 வலயங்களிலிருந்தும் 18967 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

இம் மாணவர்களுக்கென ஆளுநரின் வழிகாட்டலில் வட மாகாண கல்வி அமைச்சுடன் வடமாகாண கல்வித்திணைக்களம் மற்றும் வலயக் கல்வித் திணைக்களங்களும் இணைந்து பாடசாலை மட்டத்தில் விசேட செயலமர்வுகள் பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மாதிரிப்பரீட்சைகளை நடாத்தி மாணவர்களை சிறந்த முறையில் தயார்படுத்தியுள்ளனர்.

அரசாங்கத்தால் நடாத்தப்படும் முதலாவது பொதுப்பரீட்சையில் எதிர்பார்க்கும் சித்திக்கான புள்ளிகளுக்கு மேல் மாணவர்கள் பெறுவதற்கும் இப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு ஆசியைத் தெரிவித்துள்ள வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும் நிதாணனத்துடனும் மதிநுட்பத்துடனும் பரீட்சையினை அணுகி சிறந்த பெறுபேறுகளைப் பெற தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

### யாழ்.போதனா...

ண்ன், செல்வரத்தினம், வர்த்தகர் ஜனக்குமார், ஜோர்ஜ், ரஞ்சன் ஆகியோருக்கு அமைச்சர் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் கடந்த முறை நியமிக்கப்பட்டிருந்த அபிவிருத்திக் குழு பல முன்னேற்றகரமான பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும் வைத்தியசாலை நிலைமைகளில் மாற்றங்கள் காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன் வைத்தியசாலைப் பணிப்பாளரின் பணிகளும் பாராட்டத்தக்கதாக இருப்பதாகவும் தெரிவித்தார். புதிய அபிவிருத்திக்குழுவின் தலைவராக மீண்டும் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் செயலாளராக மீண்டும் கொல்லின் செல்வர் செல்வவடிவேல், உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உயர்...

செய்யப்படாததால் தனிப்பட்ட பரீட்சார்த்தியாகப் பரீட்சைக்குத் தோற்றியிருக்கிறார். இவர்களுக்கு ஹெரோயினை விநியோகித்து வருபவர் பல்வேறு மோசடிக் குற்றச்சாட்டுகளின் கீழ் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே எனத் தெரியவந்துள்ளது கையடக்கத் தொலைபேசி மூலம் அவருடன் தொடர்புகொள்ளும் இந்த மாணவர்கள் அவர் குறிப்பிடும் ஓர் இடத்துக்குச் சென்று ஹெரோயினைப் பெற்றுக்கொள்வது வழக்கமாக இருந்தது எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

### பரீட்சைக்கு...

எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

முதலாவது வினாத்தாளுக்கான விடைகளை எழுதுவதற்கு முற்பகல் 9.30 தொடக்கம் முற்பகல் 10.15 வரை மாணவர்களுக்கு 45 நிமிட காலம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது வினாத்தாளுக்கு 10.45 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மாணவர்களுக்கு ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் வழங்கப்படும்.

பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் கால தாமதமின்றி பரீட்சை நிலையங்களுக்கு சமுகமளிப்பதன் மூலம் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெடிபொருட்கள் மீட்பு

யாழ், பளை வண்ணாங்கேணிப் பகுதியிலுள்ள குளம் ஒன்றிலிருந்து 81 மில்லிமீற்றர் குண்டொன்று நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

குளத்தில் புதையுண்ட நிலையில் மேட்டார் குண்டிருப்பதை பார்த்த பொதுமக்கள் பளைப்பொலிஸாருக்கும் அருகிலுள்ள இராணுவத்திற்கும் அறிவித்துள்ளனர்.அதனையடுத்து, பொலிஸார் இராணுவத்தினருடன் சென்று மேற்படி மோட்டார் குண்டை மீட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, பளை வேம்பொடுக்கேணி பகுதியிலுள்ள தனியார் காணியில் உள்ள கினற்றுக்குள் இருந்து எம் 75 கைக்குண்டொன்றும். ஆர்.பி.ஜி குண்டொன்றையும் நேற்று மாலையில் மீட்டுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.கிணற்றில் நீர் வற்றியுள்ள நிலையில் கினற்றுக்குள் குண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேற்படி கைக்குண்டையும் ஆர்.பி.ஜி குண்டையும் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (18)

# 12 பயனாளிகளுக்கு நிவாரணக் கொடுப்பனவு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு 12 பேருக்கு வழங்குவதற்குரிய நிதியாக 120 000 ரூபாவை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரனின் பணிப்பின் பேரில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் வெளிக்கள மேற்பார்வை செய்து தகுதியான பயனாளிகளைத் தெரிவுசெய்தார்.

உரிய பிரிவின் கிராம அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விணணப்பத்தின் பேரில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலா 10 000 ரூபா வீதம் இந்த நிதி இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. எதிர்பாராத தீ விபத்து, கடுங்காற்று என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களே இந்த நிதி உதவியைப் பெறவுள்ளனர். இவர்கள் வீடு புனரமைப்பை உரிய முறையில் செய்தால் அவரகளுக்கு இரண்டாம் கட்ட நிதி நன்கொடை வழங்கப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

### மடுவில்...

திருவிழா திருப்பலி நிறைவடைந்த பின்னர் விமானம் அந்த இடத்திலிருந்து நகர்ந்து சென்றதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

### இராணுவத்தில்...

பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக 28ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவரை வைத்தியர் பரிசோதித்து அவரிற்குவயிற்றுப்புற்றுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டிருந்ததாக தெரிவித்த யாழ். போதனாவைத்தியசாலைப்பணிப்பாளர் எனினும் அவர் சிகிச்சை பலனின்றி கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்ததாகத் தெரிவித்தார். இவர் புற்றுநோய் காரணமாக உயிரிழந்ததன் காரணமாக பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்தார். இந்தக் காரணத்தை விடுத்து ஊடகங்களில் வெளிவந்தது போன்று மர்மமாக அவர் உயிரிழக்கவில்லை என்றும் தொவித்தார். மேலும் இந்த வீராங்கனையின் உயிரிழப்புக்குறித்து யாழ். பாதுகாப்பு படையினரின் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் யாழ். படையினரின் ஊடக இணைப்பாளர் பல்லேவலவின் ஏற்பாட்டிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கோப்பாய் 51 ஆவது டிவிசன் தளபதி குமுதுபேரேரா கலந்து கொண்டார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இருந்து தொவித்த பல்லேவல வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கு இலங்கை இராணுவத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாக இவ்வருடம் பயிலுனர் வீரவீராங்கனைகள் 523 பேர் இல்ங்கை இராணுவத்தின் தொண்டர் படையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். பல்வேறு தொழில்களுக்கான இவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் பெண்கள் 44பேரும் காங்கேசன்துறை 7ஆவது படையணிக்கு உள்வாங்கப்பட்டதுடன் பெண்கள் 44 பேரும் காங்கேசன்துறை 7ஆவது படையணிக்கு உள்வாங்கப்பட்டனர். இவ்வாறு உள்வாங்கப்பட்ட பெண்வீராங்கனையே அஜந்தா பிரசாத், இவர் வயிற்றுவலிகாரணமாக கடந்த மாதம் 26ஆம் திகதி பலாலி இராணுவவைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருந்தும் அவர் மேலதிக சிகிச்சையின் நிமித்தம் 28ஆம் திகதி யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவரிற்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் மூலம் அவரின் வயிற்றில் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. அவரிற்கு புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கப்பட்டிருந்தபோதும் கடந்த 14ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் தெரிவித்தார்.

இவரது உயிரிழப்பிற்கு வயிற்றுப்புற்றுநோய் காரணம் என்று வைத்திய அறிக்கைகள் உறுதி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது இறுதிச்சடங்குகள் இராணுவ மரியாதையுடன் அவரது இடத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் அவரது நோய்காரணமாக அன்றைய தினமே அடக்கம் செய்யப்பட்டது. என்றும் தெரிவித்த இராணுவப்பேச்சாளர் இவர் இராணுவத் தொண்டர்படைக்கு விண்ணப்பித்தபோது தனக்கு நோய் இருப்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை அவ்வாறு தெரிவித்திருந்தால் அவருக்கு ஏற்ற சிகிச்சை வழங்கப்பட்டிருக்கும் இருந்தும் அவர்தொழில் வறுமை காரணமாக இருக்கலாம் என்ன இலக்கிற்காக இராணுவத்தில் இணைந்து கொண்டாரோ அவரது இலக்கு நிறைவேற முன்னரே அவர் உயிரிழந்தது எமக்கும் வேதனையைத் தந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். ஊடகங்கள் இவ்வாறான செய்திகளை வெளியிடும்போது இராணுவத்தின் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பிரசுரிக்குமாறும் கேட்டுக்கொண்டார். (பா)

### இந்திய...

ஒன்றிணைந்து பேச்சுக்களை நடத்தி, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, காலம் காலமாக நடைபெற்று வந்தது போன்று நாட்டின் தென்பகுதியில் உள்ள பெரும்பான்மை இன மீனவர்கள் பருவ காலத்தில் வடபகுதிக்கு வந்து தொழில் செய்துவிட்டு உடனடியாகத் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் அவர்களை நிரந்தரமாக வடபகுதியில் குடியிருத்தி முழுமையாகத் தொழில் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள, இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியுள்ள கடற்றொழிலாளர் இணையம், குறிப்பாக வலிகாமம் வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல வருடங்களாக இடம்பெயர்ந்தவர்களாக இன்னும் இருக்கின்றார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

"வடபகுதி மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்திற்குப் பதிலாக அரசாங்கம் வலைகளை வழங்கியுள்ளது. விலையேற்றப்பட்டுள்ள எரிபொருளைப் பெறுவதற்கு மீனவர்களிடம் வசதியற்ற காரணத்தினாலேயே அவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டது. ஆனால் அந்த மானியத்தை வழங்காமல், அவர்களுக்கு வலைகளை வழங்குவதால் எந்தப் பயனும் கிடையாது" என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும், சர்வதேச கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான ஹேர்மன் குமார, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் அன்டனி ஜேசுதாசன், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதித் தலைவர் எம்.எம்.ஆலம், மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் விமலின் யோசனைகள்; முடிவுகள் எடுக்கவில்லை அரசு

## என்கிறார் அமைச்சர் சிறிசேன



(கொழும்பு)


அமைச்சர் விமல் வீரவன்ஸ வின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி முன்வைத்துள்ள 12 அம்ச யோசனைத் திட்டங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரை முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்புத் திருத்தம் உட்பட 12 அம்ச யோசனைகள் சம்பந்தமாக தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணக்கத்தை ஏற்படுத்தவில்லை எனவும் சுதந்திரக் கட்சியுடன் மட்டுமே இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்திற்கு அமைய இந்த யோசனைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அது பற்றி முடிவு எடுக்கப்படும் எனவும் சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுபலசேனாவிடமும் ஜனாதிபதி வேட்பாளர்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுபலசேனா அமைப்பின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தாம் களமிறக்க உள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.



சிங்கள பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த யோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அறிவிக்க உள்ளதாகவும் அவ்வாறு இந்த யோசனைக்கு அவர்கள் மறுப்பு தெரிவிப்பார்களாயின் தாம் தனியாக வேட்பாளரைக் களமிறக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மோ. சைக்கிள்–ஆட்டோ மோதல் படுகாயமடைந்தனர் இருவர்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் ஆட்டோ ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்களுக்குள்ளானதில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நகர் பருத்தித்துறை வீதிப்பகுதியில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்து சம்பவத்தில், ஸ்கூட்டியில் வந்த பெண் ஒருவரும், மோட்டா சைக்கிளிளில் வந்த உடுவில் அம்பலவாணர் வீதிப்பகுதியைச் சேர்ந்தஎஸ். ஜெயந்தன் (வயது 40) என்பவரும் படுகாயம் அடைநதுள்ளனர்.

இவ்விபத்து சம்பவம் தொடர்பில் ஆட்டோ சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(25)

# ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் கிளி.இல்

கிளிநொச்சியில் சகல வசதிகளுடன் கூடிய ஜேர்மன் தொழில நுட்ப பயிற்சி நிறுவனமொன்றை ஸதாபிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதனையடுத்து பயிற்சி நிலையத்திற்கான நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக 700 மில்லியன் ரூபா செலவிடப்படும். இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இந்த பயிற்சி நிறுவனம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

# வடக்கில் மழை வேண்டி இன்று நல்லூரில் யாகம்

வடக்கில் ஏற்பட்டுள்ள வறட்சியைப் போக்க மழை வேண்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இராகவேந்திரா மடத்தில் இன்று காலை 7.30 மணிமுதல் யாகம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சீரான மழை பெய்யாத காரணத்தால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களும் கால்நடைகளும் குடிதண்ணீருக்கு அலையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மழை வேண்டி சிவத்தமிழ் அர்ச்சகர்கள் செந்தமிழ் திருமறையில் இந்த யாகத்தை நடத்தவுள்ளனர்.

# சிறுமியை தூக்க முயன்ற அதிசய பறவையால் பரபரப்பு



அதிசய பறவையொன்று தரம் மூன்றில் கல்வி பயிலும் சிறுமியொருவரைத் தூக்கிச் செல்ல முயன்ற சம்பவமொன்று அநுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அனுராதபுரம் மாவட்டத்தில் திருப்பனை எனும் பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாலினி வாசன என்ற சிறுமியை ஆறடி சிறகும் நான்கு அடி உயரமும் கொண்ட அதிசயப் பறவை ஒன்று தூக்கிச் செல்ல முயன்ற போது அப்பறவை பொது மகன் ஒருவனால் அடித்து துரத்தப்பட்ட காரணத்தால் சிறுமி காப்பாற்றப்பபட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இப்பகுதி மக்கள் மத்தியில் பெறும் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான ஓர் அதிசய பறவை அப்பகுதியிலோ அல்லது இலங்கையிலோ காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் பகுதியில் வாழும் சீகல் பறவையாக இருக்கலாமெனவும் அப்பிரதேச மக்களிடம் சந்தேகம் உருவாகியுள்ளது.

# ரணிலின் டுவிட்டர் பெயரில் போலியான பதிவுகள்




(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியத தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கை ஆரம்பித்துள்ள நிலையில் பொய்யான சுய தகவல்களுடன் சில குழுக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் பெயரில் கணக்குகளைத் திறந்துள்ளன.

இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் பதிவுகளை குழப்பும் நடவடிக்கைகளை அவர்கள் நோக்காக கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போலியான டுவிட்டர்களில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சில பதிவுகளில் (குட் மோனிங் சிறிலங்கா இன்று நான் பிரயோசனமான வேலையை செய்யவேண்டும். வீட்டை கூட்டிப் பெருக்கப்போகிறேன்.

இன்றைய நாள் வேலைப்பளுவான நாள்" என்ற பதிவுகள் பதிவுச்செய்யப்பட்டுள்ளன. "திடீர் என்று எழும்பினேன். எனினும் செய்வதற்கு எதுவும் இல்லை. யோசனையும் வெறுமனே உள்ளது. அலரி மாளிகைக்கு சென்றால் இவ்வாறு யோசிக்கத் தேவையில்லை.

மைத்திரியிடம் கேட்டபோது மக்கள் என்னுடன் இணைந்து போட்டோ எடுத்துக்கொள்ள விரும்பவில்லை என்று கூறினார். எனவே மைத்திரி எனக்கு வாக்கு போடுவாரா? என்று எனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது போன்ற பதிவுகள் ரணில் விக்கிரமசிங்கவின் போலி டுவிட்டர் பதிவுகளில் எழுதப்பட்டுள்ளன.

# நுளம்பு பெருகும் வகையில் சூழல்; அனுப்பப்பட்டது இறுதி எச்சரிக்கை

(கொழும்பு)



இந்த வருடத்தின் நிறைவடைந்த இதுவரையான காலப் பகுதியில், நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 67 ஆயிரத்து 869 பேருக்கு இறுதி எச்சரிக்கை அறிவித்தல் அனுப்பபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹன விடுத்துள்ளார்.

இதனிடையே, 8 ஆயிரத்து 650 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலப்பகுதியினுள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் ஐந்து இலட்சத்து 42 ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியினுள் ஆயிரத்து 468 டெங்கு நோய் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் தொற்று காரணமாக மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இதய அஞ்சலிகள்



## தோழர் ஜெகநாதன்

நீண்டகாலமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் தன்னை அர்ப்பணித்து பணியாற்றிய தோழர் ஜெகநாதன் அவர்களை இன்று (15.08.2014) இழந்துவிட்டோம்.

மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்ற தோழர் ஜெகநாதன் மிக நெருக்கடியான அச்சுறுத்தல் நிறைந்த காலப்பகுதியிலும் எம்மோடு துணிந்து நின்று எமது அரசியல் பயணத்தில் தனது பங்களிப்பைச் செய்தவராவார்.

அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராகவும் தோழர் ஜெகநாதன் இருந்தார். 1946.05.02ஆம் திகதி பிறந்தார். அவர் எமது மக்களுக்கு செய்த சேவைகளை எவராலும் மறந்துவிடமுடியாது.

சமூகம் மீதான தனது பணியை செவ்வனே செய்து இன்று நிரந்தரமாக எம்மைவிட்டு பிரிந்துவிட்டார். அவரது இழப்பு தோழர்களாகிய எமக்கும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாததாகும்.

தோழர் சுப்பையா ஜெகநாதன் அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருடனும் எமது ஆழ்ந்த கவலைகளையும் பகிர்ந்து கொள்கின்றோம். தோழர் ஜெகநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தோழர்கள்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

(இ)